Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

படச்சுருள்கள் அனைத்தையும் கணினி
தொழில் நுட்பத்தில் ஒருமணி
நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள
பொற்காலம் வண்ணக் கலையகம்
MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள்,
படம் பிறேம் செய்தல்
அனைத்திற்கும் பொற்காலம்
வண்ணக்கலையகம்
யாழ் சாலை,
கிளிநொச்சி. (சி-3689)
R.V.
பந்தல்சேவை
தர்மபுரம்.

ஈழநாதம்
EELANATHAM
மக்கள் நாளிதழ்
பக்கங்கள் -08

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 கார்த்திகை -07 23-11-2003 ஞாயிற்றுக்கிழமை ஓசை 278

# விடுதலைப்புலிகள் சமாதானத்தை நேர்த்தியாகக் கடைப்பிடிக்கின்றனர்

## - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

(வவுனியா)

இன்றைய சமாதானச் சூழ்நிலையினை கட்டி எழுப்ப அனைவரும் உழைக்க வேண்டும். கடந்த இரண்டு வருடங்களாக நாட்டில் உள்ள சமாதானம் காரணமாக அனைவரும் சந்தோஷமாக உள்ளனர் என்று பிரதமர் ரணில்விக்கிரமசிங்க பதவியா ரஜமகா விகாரையில் சிறப்புரையில் தெரிவித்தார். மேலும்,

போர்நிறுத்த உடன்படிக்கை நூற்றுக்கு நூறுவீதம் சரியாகக் கடைப்பிடிக்கப்படுகின்றதா என்பது கேள்விக்குறிதான். அவ்வப்போது சில முறுகல்நிலை ஏற்படுகின்றதுதான், விடுதலைப்புலிகளைப் பொறுத்தமட்டில் கடந்த இருபது வருடம் போர் புரிந்தவர்

(8 ஆம் பக்கம் பார்க்க)



# சமாதானத்தை முன்னெடுக்காது உதவிகளை எதிர்பார்க்கமுடியாது

## ஐரோ.யூனியனின் வெளிவிவகார ஆணையாளர்

(கொழும்பு)

இலங்கையில் சமாதான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படாமல் வெளிநாட்டு உதவிகளை எதிர்பார்க்கமுடியாது எனஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார ஆணையாளர் கிறிஸ்தோபர் பெட்டன் தெரிவித்துள்ளார்.

நடைமுறைஅரசியல் நெருக்கடியைத் தவிர்த்து இலங்கையின் அனைத்து தரப்புகளும் தியாக சிந்தனையுடன் செயற்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். இலங்கைக்கு விஜயம் செய்யும்முன்னர் அவர் வெளியிட்டுள்ள கருத்திலேயே கிறிஸ தோபர் பெட்டன் இதனைத் தெரிவித்துள்ளார்.

கிறிஸ்தோபர்பெட்டன்எதிர்வரும் 25ஆம், 26ஆம் திகதிகளில் இலங்கைக்கு வருகிறார் இவர் இலங்கையில் சனாதிபதி, பிரதமர், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் ஆகியோரைச் சந்திக்க விருக்கிறார். (32)

# யாழ். குடாநாட்டில் 'மாவீரர்நாள்' எழுச்சியை அடக்கி ஒடுக்கிவிட ராணுவம் முயற்சி!

## படையினர் - மக்கள் இடையே முறுகல் நிலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் 'மாவீரர் நாள்' எழுச்சியை அடக்கி ஒடுக்கிவிடும் நோக்கில் சிறிலங்கா இராணுவத்தரப்பு அடாவடித்தனமான செயல்களில் இறங்கியுள்ளது. மக்களினால் அமைக்கப்படும் அலங்கார வளைவுகள், சோடனைகள் என்பனவற்றை அறுத் தெறிவதோடு, எழுச்சிசெயற்பாட்டில் ஈடுபடுவோரை அச்சுறுத்தியும் வருகின்றது. இதனைத் தொடர்ந்து யாழ். குடாநாட்டில் இராணுவத்தினருக்கும் - மக்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஒன்று உருவாகியுள்ளது.

கடந்த சில தினங்களாக யாழ். குடாநாட்டில் மாவீரர் நாள் நிகழ்வை ஒட்டி மக்கள் பல எழுச்சிகரமான நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றமை தெரிந்ததே. இந்த வகையில் மாவீரர் நினைவுப் பந்தல்கள், வீதிவளைவுகள் அலங்காரச் செயற்பாடுகள் என்பன மேற்கொள் ளப்பட்டுவருகின்றன.

இதேசமயம் மக்களின் இவ் எழுச்சிக்கான செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்தும் நோக்கிலும் அச்சுறுத்தும் வகையிலும் கடந்த சில நாட்களாக இராணுவத்தினரின்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# மீண்டும் நாட்டைக் கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் முயற்சிக்கிறேன்

## -சந்திரிகா குமாரதுங்க

(கொழும்பு)

நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப தனிப்பட்ட அர்ப்பணிப்போடு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் பண்பாடு சீர்குலைந்து வரும் காலப் பகுதியில் மீண்டும் நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக தனிப்பட்ட முறையில் நான் செயற்பட்டு வருகின்றேன். அதற்கென இரண்டு பிரதான அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்கா கடற்படைக்கு புதிய ஆயுதங்கள் கொள்வனவு

(கொழும்பு)

சிறிலங்காக் கடற்படைக்கு புதிதாக ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

புதிதாகக் கொள்வனவு செய்யப்படும் ஆயுதங்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடும் போர்க் கப்பலில் பொருத்தப்படவுள்ளதாகக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கடற்படையின் தலைமையகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இதனைத் தெரிவித்த கடற்படைத்தளபதி, இவ் ஆயுதக் கொள்வனவை பரிசீலனை செய்வ

(8 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டு. நகரில் 6200 மாவீரர்களின் திருவுருவப்படங்களுடன் நினைவு இல்லம்!

(மட்டக்களப்பு)

தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு மட்டக்களப்பில் மக்கள் வணக்கத்திற்காக மாவீரர்கள் திருவுருவப்படங்கள் தாங்கிய நினைவு இல்லமொன்று நேற்று திறந்து வைக்கப்பட்டது.

தளபதி ராம் தலைமையில் மட்டக்களப்பு மகாஜனக்கல்லூரியில் ஆரம்பமான இந்நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் பிரபா ஏற்றி வைத்தார். ஈகச்சுடரினை மூன்று மாவீரர்களின் தாயார் சீனித்தம்பி விமலேஸ்வரி ஏற்றிவைத்தார்.

மட்டக்களப்பு திருமலை சந்தியிலிருந்து மகாஜனக் கல்லூரி மாணவர்களின் அணி இசை மரியாதையுடன் நகர்ந்து வந்த பேரணி மகாஜனக் கல்லூரியைச் சென்றடைந்ததும் அங்கு ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

இந்தநினைவு இல்லத்தில் மட்டு-அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த 6200 மாவீரர்களின் திருவுருவப்படங்கள் மக்கள் வணக்கத்துக்காக வைக்கப்பட்டன. நேற்றிலிருந்து

(8 ஆம் பக்கம் பார்க்க)

# - சனாதிபதி-பிரதமர் அமைத்த - பாதுகாப்புக்குழு கூடி பல்வேறு விடயங்கள் ஆராய்வு

சனாதிபதியாலும் பிரதமராலும் அமைக்கப்பட்ட பாதுகாப்புக்குழு நேற்று முன்தினம் அலரி மாளிகையில் சந்தித்து சமாதானம், பொருளாதாரம் சம்பந்தமாக இன்னொரு தடவை கூடுவது பற்றி ஆராயப் பட்டது. ஐக்கிய தேசிய முன்னணி சோமன் மலிக்சமரவிக்கிரம சனாதிபதி ஆலோசகர் மனோ டித்த வெல ஆகியோர் பங்குபற்றிய குழு கண்காணிப்புக்குழு, நோர்வேப் பிரதிநி

(8 ஆம் பக்கம் பார்க்க)

# லெப். கேணல் அப்பையாவின் நினைவுக்கல் இன்று நாட்டப்படும்

மல்லாவிப் பகுதியில் கடந்த 24-12-1997 அன்று சிறிலங்கா இராணுவ கைக்கூலிகளால் கொலை செய்யப்பட்ட லெப். கேணல் அப்பையாவின் நினைவுக் கல் திரைநீக்கம் இன்று மாலை விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் பூரண இராணுவ மரியாதைகளுடன் நடைபெறவுள்ளது.

முன்னதாக இவரது திருவுருவப்படம் நேற்று அவரது இல்லத்தில் மக்களின் வணக்கத்திற்காக வைக்கப்பட்டது. இன்று மாலை அவரது இல்லத்திலிருந்து எடுத்து வரப்படும் திருவுருவப்படம் விசுவமடு மாவீரர் மண்டபத்தில் மாலை மூன்று மணிக்கு மக்களின்இறுதி வணக்கத்திற்காக வைக்கப்பட்டு வீரவணக்கக் கூட்டம் நடைபெறும். பின்னர் விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் பூரண இராணுவ மரியாதைகளுடன் நினைவுக்கல் திரை நீக்கம் இடம்பெறவுள்ளது.

**இணைப்பு**

லெப்.கேணல் அப்பையா அண்ணரின் திருவுருவப்படம் இன்றைய எமது நாளேட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது.

# மாவீரர் நாள் நவம்பர்-27

மண்ணின் மைந்தர்களான மாவீரர்களைப் பெற்றெடுத்த பெற்றோர்களையும் நான் போற்றுகின்றேன். உங்களது குழந்தைகள் தமது உயிருக்கும் மேலாக தமது தாய் நாட்டின் சுதந்திரத்தை நேசித்தார்கள். இந்த உத்தமமானவர்களை ஒருபுனித இலட்சியத்திற்கு உவந்தளித்த பெற்றோராகிய நீங்கள் நிச்சயம் பெருமை கொள்ள வேண்டும். உங்களது குழந்தைகள் சாகவில்லை; சரித்திரமாகி விட்டார்கள்.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்குண்டு

தரமான புழுக்கொடியல் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: வடமாகாண பனை தென்னைவள அபிவிருத்திநிறுவனங்களின் பேரிணையம், கண்டிவீதி, கிளிநொச்சி வெண்புறா முன்பாக ஒரு கிலோ புழுக்கொடியல் விற்பனை விலை ரூபா 75.00 (3879)

### அமல் பல் மூக்குக் கண்ணாடி அகம்

கண்பரிசோதித்தல், தகுந்த கண்ணாடி வழங்குதல்,பல்கட்டுதல், பல் கிளிப்போடுதல்,என்பன உடன் செய்து கொடுக்கப்படும். தொடர்புக்கு: புதுக்குடியிருப்பு,பரந்தன்சாலை.(3736)

### பல்கட்டும் நிலையம்

குறித்த தவணையில் சிறந்த முறையில் பல் கட்டுவதற்கும், பற்களுக்கு கிளிப் போடுவதற்கும் யாழ்.சாலை, ஆனந்தபுரம், கிளிநொச்சியில் இயங்கிவருகிறது. வேந்தன் பல்கட்டும் நிலையம் ஆனந்தபுரம், கிளிநொச்சி. (3890)

### தவறிவிட்டது

37-1822,45-5649 இலக்கம் கொண்ட உழவு இயந்திரத்தின் உரிமங்கள் அடங்கிய கைப்பை ஒன்று சேவியர்கடைச் சந்திப்பகுதியில் கைதவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். செ. யோகானந்தராசா, 47, ஐயனார்புரம், வன்னேரிக்குளம். (8722)

# அத்தியாவசியப் பொருட்களைக் களஞ்சியப்படுத்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு கிளி.அரச அதிபர் பணிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளி.மாவட்ட கூட்டுறவுச் சங்க விற்பனைக் கிளைகள் அனைத்திலும் மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை உடன் களஞ்சியப்படுத்தி வைக்கும்படி கிளி.மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு கிளி. அரச அதிபர் தி. இராசநாயகம்பணிப்புரை விடுத்துள்ளார்.

அவர் இதுகுறித்து மேலும் தெரிவிக்கையில், தற்போது கிளி. மாவட்டத்தில்பெய்துவரும் பருவ மழைகாரணமாக சில பிரதேசங்கள் வெள்ளப் பாதிப்பிற்குள்ளாகக் கூடிய ஏது நிலைதென்படுவதன் காரணத்தினால் இக்காலப் பகுதியில் மக்கள் அத்தியாவசியப் பொருட்களை எவ்விதசிரமமுமின்றி பெற்றுக்கொள்ளும் வகையிலேயே தன்னால் மேற்படி கூட்டுறவுச் சங்கங்களுக்கு அத்தியாவ சியப் பொருட்களை உடன் களஞ்சியப் படுத்தும்படி பணிப்புரை விடப்பட்டுள்ளதாகவும் இது குறித்து கிளி. மாவட்ட ஆணையாளரிடமும் தெரிவிக்கப்பட்டுள்ளதென அரச அதிபர் எமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார். (சோ)

# அபிவிருத்தித் திட்டமிடல் முன்மொழிவுக் கூட்டம்

(கண்டாவளை)

கண்டாவளைப் பிரதேசத்துக்கான 2004,2005ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தித் திட்டமிடல் முன்மொழிவுக் கூட்டம் கடந்த வெள்ளியன்று காலை10.30 மணிக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலர் பி.கா.மத்தியாஸ் தலைமையில் நடைபெற்றது..

இக் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள துறைசார்ந்த திணைக்களத் தலைவர்கள், பொறுப்பாளர்கள், கிராம சேவகர்கள் கலந்து கொண்டு இப்பிரதேசத்தில் நடைமுறைப்படுத்த வேண்டிய வேலைத்திட்டங்கள், அபிவிருத்திகள் எனபனவற்றை ஆவணப் படுத்தி அறிக்கை சமர்ப்பித்து அதற்குத் தேவைப்படும் நிதி சம்பந்தமாகவும் குறிப்பிட்டுள்ளனர். இதன் போது பிரதேச செயலர் மேலதிகமாக சேர்க்கப்படவேண்டிய திட்டங்கள் பற்றிக் கலந்துரையாடினார். (14)

# பூநகரி கோட்டப்பாடசாலைகளில் கண்ணிவெடி விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(பூநகரி)

பூநகரி 4ஆம் கட்டை வெண்புறா நிறுவனத் தொடர்பகத்தின் ஊடாக பூநகரி கோட்டப்பாடசாலைகள் அனைத்திலும் கண்ணிவெடி விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெற்று வருகின்றன.

அத்துடன் விழிப்புணர்வு சம்பந்தமான சித்திரப்போட்டியும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இச்செயற்பாடு கடந்த மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் நடைபெற்று வருகின்றது. இக்கருத்தரங்கு நல்லூர் ம. வி., தம்பிராய் அ.த.க.பாடசாலை, சிறிவிக்னேஸ்வரா வித்தியாலயம் என்பவற்றில் நடைபெற்றது. தொடர்ந்து பரமன்கிராய் அ.த.க.பாடசாலை, கௌதாரி முனை அ.த.க.பாடசாலை, சுண்ணாவில் அ.த.க.பாடசாலை, ஞானிமடம் அ.த.க.பாடசாலை என்பவற்றில் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (34)

# இறைச்சிக்கழிவுகளால் மக்கள் பெரும் அசௌகரியம்

## தடுத்து நிறுத்த வேண்டுகை

(முள்ளியவளை)

முள்ளியவளைப்பிரதேசத்தில் உள்ள இறைச்சிக்கடைகளுக்கான கால்நடைகளை வெட்டி விட்டு கழிவுகளை முள்ளியவளை மாமூலை பகுதி மக்களின் குடியிருப்புக்களுக்கு அண்மையாகப் போடப்பட்டு வருவதால் அப்பகுதி மக்கள்துர்நாற்றத்தில்அவலப்பட்டு வருவதுடன் அக்கழிவுகளை நாய்கள்இழுத்துச் சென்று குடியிருப்புப் பகுதியில் ஆங்காங்கு போட்டு விடுவதால் மிகமோசமான சுகாதாரச் சீர்கேட்டுக்கு அப்பகுதி மக்கள் உள்ளாகிவருவதை அவதானிக்க முடிகின்றது.

தற்போது ஏற்பட்டுள்ள பருவ மழையினால் அக்கழிவுகள் நீரில் ஊறி அழுகிய நிலையில் அப்பகுதி வீதியில் செல்லமுடியாதவாறு துர்நாற்றம் வீசுகின்றது. மேற்படி கழிவுகள் உரிய முறைப்படி போடப்பட்டு நாளாந்தம் மூடப்படாமல் இருப்பதினாலேயே துர்நாற்றம் வீசுகின்றதுடன் கழிவு எலும்புகளையும் தோல்களையும் நாய்கள் இழுத்துஆங்காங்கு கொண்டு சென்று போடுகின்றது. சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக முன்வந்து இச்சுகாதாரச் சீர்கேட்டை தடுக்கவேண்டும் என அப்பகுதி மக்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளனர். மேற்படி விடயங்களை நாளாந்தம் அவதானிக்க முடிகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

### கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளி.பரவிப்பாஞ்சான் வீதியிலுள்ள கிளி. மாவட்ட கூட்டுறவுச் சபைக்கு முன்னால் உள்ள வீதியில் (றொயோற்றா) வாகன கண்ணாடி ஒன்று 21.11.2003ஆம் திகதியன்று கண்டெடுக்கப்பட்டு கிளி.மாவட்ட கூட்டுறவுச் சபையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரித்துடையவர்கள் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ள லாமென கூட்டுறவுச்சபை செயலர் க.சிவகுமார் தெரிவித்துள்ளார். (சோ)

# யாழ்.பல்கலைக்கழகத்திற்கு 91 புதிய மாணவர்கள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் 2002,2003 ஆம் கல்விஆண்டிற்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் பதிவுகளை மேற்கொள்ளாத மாணவர்களின் வெற்றிடங்களுக்குப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு புதிதாக 91பேரைத் தெரிவு செய்துள்ளது.

தெரிவு செய்யப்பட்டவர்களில் 30 பேர் பௌதீகத்திற்கும், 31பேர் உயிரியல் விஞ்ஞானத்திற்கும், 30 பேர் விவசாய விஞ்ஞானத்திற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான அனுமதிக் கடிதங்களைப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அனுப்பியுள்ளதாக பல்கலைக்கழக பதிவாளர் தெரிவித்துள்ளார்.

தெரிவுசெய்யபட்ட மாணவர்களின் பெயர்ப்பட்டியல் யாழ்ப்பாண பல்கலைக்கழக விளம்பரப்பலகையில் போடப் பட்டுள்ளது. இம்மாணவர்கள் திங்கட்கிழமை தம்மை பதிவு செய்துகொள்ளவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# நிவாரண முத்திரை எடுக்க தவறியோர் கவனத்திற்கு!

(நமது நிருபர்)

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் இடம் பெயர்ந்தோர்நிவாரண முத்திரை எடுக்கத் தவறியோருக்கு எதிர்வரும் 25ஆம் திகதி அவற்றை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்தோருக்கான நிவாரண முத்திரை கடந்த இருதவவைகள் கிளிநொச்சி கச்சேரி அலுவலர்களால் பூநகரியில் வைத்து விநியோகிக்கப்பட்டன.

இதுவரை எடுக்கத் தவறியோர் அனைவரும் எதிர்வரும் 25.11.2003 செவ்வாய்க்கிழமை காலை10.00 மணிக்கு பூநகரி வடபகுதியில் பிரதேச செயலகத்திலும், பூநகரி தெற்கில் ஜெயபுரம் உப பிரதேச பணிமனையிலும் பெற்றுக் கொள்ளலாம். எனவே தவறாது வருகை தந்து பெற்றுக்கொள்ளவும். வரும்போது உணவுப்பங்கீட்டு அட்டை, அடையாள அட்டை என்பவற்றைக் கொண்டுவருவதுடன், குடும்ப உறுப்பினரும் சமுகமளிக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் சகல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த நிவாரணம்பெறத்தகுதியான குடும்பங்களில் இதுவரை தமக்கான உலர் உணவு முத்திரைகளைப் பெறத்தவறிய குடும்பங்களுக்கு 2003.11.24ஆந் திகதி காலை 09 மணி முதல் பிற்பகல் வரை பிரதேச செயலர் பணிமனையில் வைத்து உலர் உணவு முத்திரைகள் விநியோகிக்கப்படவுள்ளன. எனவே, மேற்படி உலர் உணவு முத்திரைகளை பெற்றுக்கொள்ளாத குடும்பங்கள் இவ் இறுதிச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, தமக்கான முத்திரைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (14,34)

### பாம்புக் கடிக்கு இலக்கானார்

பூநகரி வெட்டுக்காட்டைச்சேர்ந்த கனகரத்தினம்யோகம்மா (வயது-47) கடந்த 19ஆம் திகதி இரவு எட்டுமணியளவில் பாம்புக்கடிக்கு இலக்காகினார். இவர் கிளி. மாவட்டவைத்தியசாலையில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (34)

### திருட்டு

அடைமழையைப் பயன்படுத்தி இரவுவேளை முள்ளியவளைப் பகுதியில் உள்ள நாவற்காடு கிராமத்தில் 75 தென்னம்பிள்ளைகள் களவாடப்பட்டுள்ளன.

தென்னந்தோட்டத்தின் மத்தியில் நாற்றுப்போடப்பட்டிருந்த 75 தென்னம்பிள்ளைகளை ஒரே இரவில் தொடர்மழையின்போது திருடப்பட்டுள்ளதாக மேற்படி தோட்ட உரிமையாளர் முள்ளியவளை காவல் பணிமனையில் முறையீடு செய்துள்ளார். (ஆ)

# மாவீரர் பெற்றோர்கள் காரைநகரில் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிரதேச மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 25ஆம் திகதி காரைநகர் தியாகராஜா மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

காரைநகர் பிரதேச தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர் வே.சிற்சபேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் காரைநகர் சிவசுப்பிரமணியம் வித்தியாலயத்தில் இருந்து இப்பகுதியைச் சேர்ந்த 200இற்கு மேற்பட்ட பெற்றோர்கள் பாண்ட் வாத்திய இசையுடன் நிகழ்வு நடைபெறும் இடத்துக்கு ஊர்வலமாக அழைத்துவரப்பட்டு தியாகராஜா வித்தியாலயத்தில் நிகழ்வுகள் நடைபெறும். இதில் விடுதலைப்புலிகளின் முக்கிய பிரமுகர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (33)

## காணவில்லை



ஜெயபுரம் சோலை பல்லவராயன்கட்டு இலக்கம் 74ஐ வசிப்பிடமாகக் கொண்ட ஐயன் அருணாசலம் (வயது 57) என்பவர் கடந்த 19.11.2003 புதன்கிழமை காலை வீட்டிலிருந்து புறப்பட்டவர், இன்றுவரை வீடு திரும்பவில்லை. இவர் வீட்டிலிருந்து புறப்படும்பொழுது வெண்ணிற சாரமும் தோளில் மஞ்சள் நிறத்துவாயும் அணிந்திருந்தார். மேலங்கி அணியவில்லை. தலைமயிர் முழுமையாக நரைவிழுந்துள்ளதுடன் ஓரளவு தாடியும் வளர்த்துள்ளார். இவர் பற்றியதகவல் தெரிந்தவர்கள் இல.74 ,சோலை, பல்லவராயன்கட்டு, ஜெயபுரம் மற்றும் ஐ.இராசலிங்கம், இல.60, ஜெயந்திநகர், கிளிநொச்சி,காஞ்சனா புடவையகம் நாச்சிக்குடா முழங்காவில் மற்றும் தகவல் தெரிந்த பகுதியிலுள்ள தமிழீழ காவல் பணிமனை ஆகியவற்றிற்குத் தெரியப்படுத்தவும்.

தகவல்
ஐ.சண்முகராசா,
இல.112, ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.

(சி.8724)

# எயிட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை இலங்கையில் குறைத்து மதிப்பிடப்படுகிறது!

## 7500 பேர் இந்நோயினால் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையிலுள்ள எயிட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை குறைத்து மதிப்பிடப்பட்டுவருவதாக கூறப்படுகின்றது.


இதுவரை 507 நோயாளிகள் இனம் காணப்பட்டுள்ளதாக பால்வினை நோய்களை ஒழிக்கும் இயக்கம் கூறியுள்ளது. இருப்பினும் 7500 பேர் வரை எயிட்ஸ் நோயாளிகள் இருக்கலாம் என விசேட வைத்திய நிபுணர் காந்திசேனாநாயக்க தெரிவித்தார்.

அடுத்தமாதம் 1ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு சுகாதார கல்விப்பணியகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

உலகெங்கும் 4கோடி20 லட்சம் எயிட்ஸ் நோயாளிகள் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது. இரண்டு கோடி நோயாளிகள் இந்த ஆட்கொல்லிக்குப் பலியாகியுள்ளனர்.




அமெரிக்க சனாதிபதி புஷ்சின் இங்கிலாந்து வருகையைக் கண்டித்து இங்கிலா ்தின் வடகிழக்கே செட்க் பில்ட் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம்.



அமெரிக்க சனாதிபதி புஷ்சும் பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயரும்பிரதமரின் அலுவலகத்தில் சந்தித்தபோது.

## முஷாரப் எச்சரிக்கை

(இஸ்லாமாபாத்)

சமய தீவிரவாதமும், இன வன்முறையும் தொடருமேயானால் பாகிஸ்தான் அழிந்துவிடுமென பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஷ் முஷாரப் கூறி யுள்ளார்.

இஸ்லாமபாத்தில் பத்திரிகையாளர் கூட்டத்தில் உரை யாற்றும் போதே அவர் இத னைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மீண்டும் சர்வதேசத் தடைகள் விதிக்கப்படலாம், பழங்குடிப் பகுதிகளில் குண்டு வெடிப்புக்கள் நிகழலாம் எனவும் அவர் கூறியுள்ளார்.

## 30 பேர் கைது

கிரீஸ் எல்லையைக் கடக்க முற்பட்ட 30 பேரை புதன்கிழமையன்று கிரீஸ் பொலிசார் கைது செய்தனர். இவர் கள் இந்தியா, இலங்கை, ஈரான், ஈராக், பாகிஸ்தான், சோமாலியா, எகிப்து போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

# ஈராக்கின் நிர்வாகக் கட்டமைப்புகளில் ஐ.நா. வின் பங்களிப்பு முக்கியமானதாகும்

## -பாதுகாப்புச் சபை விவாதத்தில் வலியுறுத்து

**ஈராக்கில் சுயநிர்வாகம் ஏற்படுத்தப்படும் ஒவ்வொரு கட்டத்திலும் ஐக்கிய நாடுகள் சபையின் பங்களிப்பு அவசியமாகும் என பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் மூன்று நாடுகள் வலியுறுத்தியுள்ளன.**

ஈராக் தொடர்பாக ஐ.நா பாதுகாப்புச் சபையில் நேற்று முன்தினம் விவாதமொன்று நடைபெற்றது. அமெரிக்கா மற்றும் பிரிட்டிஸ் பிரதிநிதிகள் உரையாற்றியதன் பின்னர் ரஷ்யா, பிரான்ஸ், ஜேர்மன் பிரதிநிதிகள் உரையாற்றினர்.

இதன் போது ஈராக்கின் ஒவ்வொரு நிர்வாகக் கட்டமைப்பிலும ஐ.நா.வின் பங்களிப்பின் முக்கியத்துவம் குறித்து இந்த நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

அமெரிக்கா தொடர்ந்தும் தனது தலைமைத்துவத்தை வலியுறுத்திவரும் நிலையில் இத்தகைய நிலைப்பாடு, முரண்பாடுகளை தோற்றுவிக்கக் கூடும் என தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கா தலைமையிலான ஈராக் மீதான யுத்தத்திற்கு இந்த நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்து வந்தமையும் தெரிந்ததே.

ரஷ்யப் பிரதிநிதி அங்கு கூறுகையில் ஈராக்கில் சுய நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது அவற்றில்ஐ.நாடுகள் ஸ்தாபனத்தின் பங்குபற்றி குறிப்பிடாதது கவலைக்குரிய விடயமாகுமென கூறியுள்ளார்.

ஈராக் சம்பந்தமான நிகழ்ச்சி நிரலில் அடுத்த ஆண்டு மே மாதம் 31ஆம் திகதியளவில் இடைக்கால அரசாங்கத்திற்கான தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். யூன்மாதம்30 ஆம் திகதியளவில் இடைக்கால அரசாங்கம் அமைக் கப்பட வேண்டும், அதே வேளை 2005ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் புதிய அரசியல் யாப்பு தயாரிக்கப்படுவது அவசியமெனவும் கூறியுள் ளார்.

இதன் அடிப்படையில் நடைபெறும் தேர்தல்கள் மூலம் டிசம்பர் மாதமளவில் பொதுமக்களால் தெரிவுசெய்யப்பட்ட நிரந்தர அரசாங்கம் அமைக்கப்படுமென அவர் மேலும் கூறியுள்ளார்.

# சனாதிபதியை பதவிவிலக்க எதிர்க்கட்சிகள் போராட்டம்

ஜோர்ஜியாவின் சனாதிபதி ஜோனாரிச்சீஸ் பதவிவிலக வேண்டுமெனக் கோரி எதிர்க் கட்சிகள் நேற்று ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் கருத்துத் தெரிவிக்கையில்; ரத்தம் சிந்தா புரட்சி ஒன்றுதற்சமயம் மேற்கொள்ளப்படுவதாகவும், பாராளு மன்றத்தில் நிர்வாகக் கூட்டம் நடைபெறுவதை தாங்கள் சீர்குலைக்கப் போவதாகக் கூறியுள்ளார்.

75 வயதான சனாதிபதி சீஸ் கருத்துத் தெரிவிக்கையில, ஆர்ப்பாட்டங்களின் மூலம் தன்னைப் பதவியிலிருந்து அகற்ற முடியாதெனத் தெரிவித்துள் ளார்.பாராளுமன்ற கூட்டம் திட்ட மிட்டபடி நடக்கும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.



கிழக்கு ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படையினர் படை நடவடிக்கையொன்றில் ஈடுபட்டுள்ளனர். இவர்களுக்கான விநியோகப் பணியை உலங்குவானூர்தியொன்று மேற்கொள்கிறது.

# 2005-ல் பலஸ்தீனம் தனி நாடாகும் சமாதான திட்டத்திற்கு ஐ.நா. அங்கீகாரம்

மத்திய கிழக்கு சமாதானத் திட்டத்திற்கு ஐ.நா.பொதுச் சபை அங்கீகாரம் அளித்துள்ளது. இத்திட்டத்திற்கமைய 2005ஆம் ஆண்டில் பலஸ்தீனம் தனி நாடாகப் பிரகடனப்படுத்தப்படும்.

கடந்த வியாழக்கிழமை இந்த அங்கீகாரம் ஐ.நா.பொதுச் சபையில் வழங்கப்பட்டுள்ளது. இதற்குப் பலஸ்தீனம் வரவேற்புத் தெரிவித்துள்ளது. ஆனால் இது தேவையற்றது என இஸ்ரேல் கூறியுள்ளது.

தடைப்பட்டுள்ள சமாதான முயற்சிகள் மீண்டும் புத்துயிர் பெற இந்த அங்கீகாரம் உதவுமென்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

"ஐ.நா.வின் அங்கீகாரம் பலஸ்தீனப் பிரச்சினையில் உடனடி மாற்றத்தைக் கொண்டு வரும் என எதிர்பார்க்க முடியாது. ஆனால் சமாதான முயற்சியை இனிமேல் கைவிட முடியாது. என்பது மட்டும் நிச்சயமாகியுள்ளது." என ஐ.நா.வுக்கான ரஷ்யத் தூதுவர் செர்ஜிலேய் ரோவ் கூறியுள்ளார்.

அமெரிக்கா,ரஷ்யா,ஐரோப்பிய யூனியன் ஆகியவை ஒன்றிணைந்து மத்திய கிழக்கு சமாதானத் திட்டத்தை உருவாக்கியிருந்தன. இதற்கு தற்போது ஐ.நா. சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதால் சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு இஸ்ரேலுக்கும், பலஸ்தீனத்திற்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஐ.நா.சபையின் இந்த அங்கீகாரத்தினால் பலன் கிடைக்கப் போவதில்லை என ஐ.நா.வுக்கான இஸ்ரேல் தூதர் அரியே மெக்கேல் தெரிவித்துள்ளார். பலஸ்தீனம் பயங்கரவாதத்தை அடியோடு ஒழித்தால் இத்திட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுக்க நாம் தயார் என அவர் மேலும் கூறியுள்ளார்.

பலஸ்தீனம் தனது வன்முறையைக் கைவிடவும் இஸ்ரேல் தனது ஆக்கிரமிப்புக் குடியேற்றங்களை நிறுத்தவும் இத்திட்டம் வகை செய்கிறது.

# தமிழக முதலமைச்சரைப் பதவி விலக்க எதிர்க் கட்சிகள் நிர்ப்பந்தம் அதிகரிப்பு

(சென்னை)

சொத்து சேகரிப்பு வழக்கு விசாரணையை கர்நாடகத்திற்கு மாற்ற உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதால் தார்மீக அடிப்படையில் முதலமைச்சர் ஜெயலலிதா பதவிவிலக வேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு மாநில நிர்வாகக் குழு கேட்டுக் கொண்டுள்ளது.

இவ் வழக்கு விசாரணையில் அ.தி.மு.க. அரசு முறைதவறி நடந்துள்ளதாக உச்சநீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளதால் முதலமைச்சர் தார்மீக பொறுப்பேற்று தனது பதவியைப் ராஜினாமா செய்ய வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளனர்.

அத்துடன் தார்மீக பொறுப்பேற்று முதலமைச்சர் பதவியிலிருந்து ராஜினாமா செய்ய வேண்டுமென தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் புதிய தலைவராக பொறுப் பேற்றுள்ள ஜி.கே.வாசனும் கேட்டுள்ளார்.

காங்கிரஸ் கட்சி தி.மு.க.விலிருந்தும், அ.தி.மு.க.விலிருந்தும் சமதூரத்திலேயே இருந்து வரும் எனக் கூறிய அவர் மத்தியிலும் ,மாநிலத்திலும் ஆட்சி செய்கின்ற கட்சிகளிடம் இருந்து தமது கட்சி ஒதுங்கியே இருக்குமென அவர் மேலும் கூறியுள்ளார். அத்துடன் அ.தி.மு.க. மக்கள் விரோத கொள்கைகளை கடைப்பிடித்து வருவதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

# பத்திரிகையாளர் மீதான நடவடிக்கையில் நாம் விதிமுறைகளை மீறவில்லை

## தமிழக அரசு கூறுகிறது

(சென்னை)

தமிழ்நாட்டில் 6 பத்திரிகையாளர்களைக் கைது செய்ய வேண்டுமென சட்டப் பேரவை எடுத்த முடிவில் விதிமீறல்கள் எதுவுமில்லையென உச்ச நீதிமன்றத்தில் தமிழகச் சட்டப் பேரவை செயலாளர் தெரிவித்துள்ளார்.

பேரவை உரிமைக்குழு சட்டத்திற்கு உட்பட்டதால் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இதில் விதிமீறல் எதுவுமில்லையென உச்ச நீதி மன்றத்தில் அவரின் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதில் மனுவில் கூறப்பட்டுள்ளது. இது தொடர்பாக பேரவையின் உரிமைக் குழு எடுத்த முடிவிற்கும், முதலமைச்சருக்கும் பேரவைத் தலைவருக்கும் எவ்வித தொடர்புமில்லையென அவர் அம் மனுவில் கூறியுள்ளார்.

எனவே சம்பந்தப்பட்ட பத்திரிகையாளர்களின் மனுவைத் தள்ளுபடி செய்யவேண்டும் என அவர் உச்ச நீதிமன்றத்தில் கூறியுள்ளார்.



துருக்கியின் இஸ்தான்புலில் கடந்த வியாழனன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் காயமடைந்த பெண்ணொருவர் சகிச்சைக்காகத் தூக்கிச் செல்லப்படுகின்றார்.

# ஜெயலலிதாவின் சர்வாதிகாரம்

## விரைவில் முடிவுக்கு வருகிறது..?

அ. கலைவாணி



தமிழகத்தில் நாளுக்கு நாள் உரிமைகள் பறிக்கப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்தவண்ணமுள்ளன. பத்திரிகைச் சுதந்திரம், பேச்சுரிமை, எழுத்துரிமை என்பன குறித்து எழுந்துள்ள கேள்வியே இவ்வெதிர்ப்புக் குரல் களுக்குக் காரணமாகும்.

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தமிழக சர்வாதிகாரி என வர்ணிக்கப்படுகின்றளவிற்கு நிலைமை மோசமாகியுள்ளது.

உலகில் ஹிட்லர், முசோலினி, இடிஅமீன் ஆகியோருடன் ஒப்பிட்டுப் பேசப்படும் அளவிற்கு ஜெயலலிதாவின் நடவடிக்கைகள் உள்ளன.

பத்திரிகைகளும் எதிர்க்கட்சிகளும் தற்போது தமிழக அரசுக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கி நிற்கின்றன. இத்தகைய செயற்பாடானது ஜெயலலிதாவின் எதிர்கால அரசியலைப் பாதிக்காமல் இருக்கப் போவதில்லை.

ஜெயலலிதாவின் நடவடிக்கைகள் கட்டு மீறிச் சென்றதினால் தற்போது பத்திரிகையாளர்களுக்கான கைது நடவடிக்கையில் உச்சநீதி மன்றம் அண்மையில் தலையீடு செய்துள்ளது.

ஆனால் ஹிந்துப் பத்திரிகைக்கு மத்தியரசின் பாதுகாப்பு வழங்கப்படும் என முடிவு செய்துள்ளமை, உச்சநீதிமன்றத்தின் இடைக்கால தடை என்பன நிச்சயமாக தமிழக முதல்வருக்கு ஒரு பேரிடி என்பதை விட, மிகவும் அவமானம் தரும் விடயமாகத் தான் கணிக்க முடிகின்றது.

இதனால்தான் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா அவசர அவசரமாக ஹிந்து பத்திரிகைக்கு மத்தியரசின் பாதுகாப்பு வழங்கப்படுமளவிற்கு தமிழகத்தில் எவ்விதமான இடையூறுகளும் ஏற்பட்டு விடவேயில்லை. என துணைப்பிரதமர் அத்வானிக்குக் கடிதம் எழுதியிருந்தார்.

தமிழகப் பத்திரிகையாளர்கள் ஐந்து பேருக்கு 15நாள் சிறைத் தண்டனை என அறிவித்தலை மேற்கொண்டதையடுத்தே ஜெயலலிதா சிக்கல்களுக்குள் மாட்டிக் கொண்டார் எனலாம். இன்னொரு வகையில் கூறின் பத்திரிகையாசிரியர்களுக்குத் தான் வெட்டிய குழியில், தற்போது அவரே வீழ்ந்து விட்டார் எனலாம்.

அண்மையில் ஹிந்து பத்திரிகையாசிரியர் என்.ராம், அதன் நிர்வாக ஆசிரியர் மாலினி பார்த்தசாரதி, அதன் வெளியீட்டாளர் எஸ்.ரங்கராஜன், அதன் கட்டுரையாளர் வி.ஜெயந்தீ, அதன் சிறப்புச் செய்தியாளர் சதா வெங்கடேன் ஆகியோருக்கு தமிழக சட்டப்பேரவையின் உரிமைகளை மீறி விட்டதாக 15 நாள் சிறையில் வைக்குமாறு தமிழக சட்டசபை உத்தரவிட்டிருந்தது.

தமிழக முதல்மைச்சர் ஜெயலலிதா சட்ட சபையில் நடந்து கொண்ட விதத்தை ஹிந்து பத்திரிகை ஆசிரியர் தலையங்கத்தில் கண்டித்திருந்தது.இதனையே சட்ட சபை உரிமை மீறல் எனக் குற்றம் சாட்டப்பட்டது.

அத்துடன் ஹிந்துவின் ஆசிரியர் தலைப்பை மொழி பெயர்த்து தி.மு.க.வின் அதிகார பூர்வ பத்திரிகையான முரசொலியும் அதனை வெளியிட்டிருந்தது.


இதுவும் குற்றம் என்று கூறும் தமிழக சட்டசபை முரசொலி ஆசிரியர் செல்வத்திற்த 10 நாட்கள் சிறைத் தண்டனை விதித்திருநதது.

அதாவது ஒரே கல்லில் இரண்டு மாங்காய் விழுத்திய பெருமைக்கு சொந்தம் கொண்டாடினார் முதலமைச்சர்.

பத்திரிகையாளர்கள் மீது குற்றச்சாட்டுக்களை அடுக்குவதில் தமிழக அ.தி.மு.கவுக்கு நிகர் யாருமே இதுவரை உருவாகவில்லை எனும் பெருமையும் அ.தி.மு.க. காலம் காலமாகத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறது.

1987ல் எம்.ஜி.ராமச்சந்திரன் முதலமைச்சராக இருந்தபோது ஆனந்த விகடன் ஆசிரியர் பாலசுப்பிரமணியத்திற்கு 3 மாதம் சிறைத தண்டனை விதிக்கப்பட்டது.

பத்திரிகைகள் அனைத்தும் கிளர்ச்சி செய்ததையடுத்து எம.ஜி. ஆர் ஆனந்த விகடன் ஆசிரியரை மன்னிப்பதாகக் கூறி அவரது சிறை உத்தரவை நீக்கி விட்டார்.




அதேபோல் 1992ல் தமிழகத்தில் ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த போது நிருபர் சுனில் என்பவருக்கு இன்று போலவே சட்ட மன்ற உரிமையை மீறியதாகக் குற்றம் சாட்டி சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

1992-1996 வரையான காலத்தில் தமிழக அரசு பத்திரிகையாளர்கள் மீது நூற்றுக கணக்கான வழக்குகளைப் போட்டது. நக்கீரன் பத்திரிகை மீது மட்டும் 150 வழக்குகள் போட்டது. இதில் ஆச்சரியம் என்னவெனில் நக்கீரன் பத்திரிகை மீது மட்டும் ஒரே நாளில் பல வழக்குகள் போடப்பட்டதுதான்.

இதிலிருந்து தமிழக அரசுக்கும் பத்திரிகைக்குமிடையேயுள்ள உறவு முறை தெளிவாகின்றது என்பது மட்டும் வெளிப்படை!

1997 இல் தி.மு.க. கருணாநிதி முதலமைச்சர் ஆனவுடன் முதல் செய்த காரியம் பத்திரிகையாளர்கள் மீது போடப்பட்ட வழக்குகளை நீக்கியமைதான்.

ஆனால் மீண்டும் முதலமைச்சரானவுடன் ஜெயலலிதா மீண்டும்முருங்கை மரம் தாவும் வேதாளம் போல ஆனார் எனலாம்.

ஹிந்து பத்திரிகை மீது இன்றுவரை 17 வழக்குகள் உள்ளன. நக்கீரன் பத்திரிகை வரையான ஏனைய பத்திரிகைகள் மீது இன்று 35 வழக்குகள் போடப்பட்டுள்ளன.

இவற்றை நோக்குகையில் தமிழக அரசின் நாளாந்த கடமைகளிலொன்று எந்தப் பத்திரிகை மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தலாம் என்றும் அதன் மூலம் எந்தப் பத்திரிகையாளர்களை சிறைக்குள் கம்பி எண்ண வைக்கலாம். என்பதற்கு சட்டத்தின் ஓட்டைகளை ஆராய்வதா....? எனும் வினா எழாமல் இல்லை.

ஆனால் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா நினைத்தது ஒன்று நடந்ததோ வேறொன்று தமிழகப் பத்திரிகைகளை மிரட்டி வைக்கவே அவர் விரும்பினார்.




நக்கீரன் ஆசிரியர் கோபால் பொடோ சிறையில் உள்ளார். தற்போது ஹிந்துப் பத்திரிகையாளர்கள் ஐந்து பேர்,முரசொலி ஆசிரியர் மீதான தண்டனையானது எதிர் காலத்தில் தமிழக அரசியல் பற்றியோ, தமிழக சட்டசபை பற்றியோ அல்லது தன்னைப் பற்றியோ விமர்சிக்க அச்சம் கொள்ளச் செய்யும்.

விமர்சனம் செய்ய விரும்பும் பத்திரிகையாளர்களுக்கும் நக்கீரன் கோபாலின் நிலையோ, ஹிந்து,முரசொலி நிலையோ ஏற்பட்டுவிடும் என அச்சம். கொண்டு விமர்சனங்களைத் தவிர்த்து விடும் என்றுதான் தமிழக முதலமைச்சரின் எண்ணமாக இருந்திருக்கக் கூடும்.

ஆனால் இன்றோ பத்திரிகைச் சமூகம் ஓட்டு மொத்தமாகத் திரண்டுள்ளது. தமிழக முதலமைச்சருக்கு எதிராகக் குரல் கொடுக்கின்றன.

அதுமட்டுமன்றி தி.மு.க, காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்பன ஒன்றிணைந்து பிரதமர் வாஜ்பாயிடம் தமிழக முதலமைச்சரின் நடவடிக்கைகளுக்கு அதிருப்தி வெளியிட்டுள்ளன.

அதே நேரம் இக் கட்சிகள் அனைத்தும் மு.க.ஸ்டாலின் தலைமையிலேயே வாஜ்பாயை சந்தித்துள்ளன.

இந்த வகையில் பத்திரிகையாசிரியர்கள் மீதான தமிழக முதலமைச்சரின் காட்டமான நடவடிக்கைகளை தி.மு.க. தலைவர் தனக்கு சாதகமாக்கி, வெற்றியும் கண்டுள்ளார் எனலாம்.

அந்த வகையில் தான் எதிர்கால தி.மு.க தலைவர் என எதிர்பார்க்கப்படும் மு.க.ஸ்டாலினை மத்தியரசுடன் தொடர்புபடுத்த சந்தர்ப்பம் பார்த்திருந்தார். ஸ்டாலின் தலைமையில் கட்சிகளை ஒன்றிணைத்து வாஜ்பாயிடம் அனுப்பிய விடயத்தில் நன்மையும் அடைந்துள்ளார்.

அதே நேரம் ஏனைய மாநில முதலமைச்சர்கள் கூட அதிருப்தி வெளியிட்டுள்ளார்கள். தமிழக முதலமைச்சரின் பத்திரிகையாளர் மீதான நடவடிக்கைகளுக்கு ராஜஸ்தான் முதல்வர் அசோக் கெலாட், மேற்கு வங்காள முதல்வர் புத்ததேவ், கேரளா முதல்வர் ஏ.கே.அந்தோணி, ஆந்திராவின் முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு, அரியானா முதல்வர் ஓம்பிரகாஸ் ஆகியோர் கடுமையான கண்டனம் வெளியிட்டுள்ளார்கள்.

கர்நாடக முதலமைச்சர் எஸ்.எம். கிருஸ்ணாவோ ஒருபடி மேலே சென்றுள்ளார். கர்நாடகத்தினுள் ஹிந்து பத்திரிகையாசிரியர் என்.ராமை தேடிவந்த தமிழகப் பொலிசார் கர்நாடகத்தினுள் இருப்பார்கள் ஆயின் உடனடியாகப் பிடிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

மாநிலத்தினுள்ளேயான சிக்கல் நிலை மாறி மாநிலங்களுக்கிடையே சிக்கல் உருவாகும் நிலையை உருவாக்கியுள்ளார் தற்போது ஜெயலலிதா.

ஏற்கனவே கர்நாடக அரசைக் கலைக்க வேண்டும் என்று கூறியதனால் கர்நாடகம் ஜெயலலிதா மீது விசனப்பட்டுக்கொண்டிருக்கின்றது. இந் நிலையில் தமிழகப் பொலிசார் கர்நாடகத்தினுள் பத்திரிகையாசிரியர்களைத் தேடிச் சென்றமையினால் இரு மாநிலமும் சுமூக நிலையை இழந்துள்ளன.

அதுமட்டுமன்றி இந்துத்துவாவை கையிலெடுத்துக் கொண்டு விஸ்வ ஹிந்து பரிஷத்தினை கைக்குள் போட முயன்றிருந்தார் ஜெயலலிதா.

அண்மைக் காலத்தில் அயோத்தியில் ராமர் கோயில் கட்டுதல், கோவில்களில் பலியிடல் போன்றவற்றை தடைசெய்ததன் மூலம் விஸ்வஹிந்து பரிஷத்தின் பாராட்டுதல்கள் பெற்றிருந்த ஜெயலலிதா தற்போது பத்திரிகைகள் மீது மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு விஸ்வ ஹிந்து பரிஷத் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதே வேளை,எதிர்க் கட்சிகள் அனைத்தும் தமிழக அரசை கலைத்து விடும் கோரிக்கையை பிரதமர் வாஜ்பாயிடம் முன் வைத்தன.ஆனால் பிரதமர் வாஜ்பாயோ, பத்திரிகைத் துறைக்கு மத்தியரசின் பாதுகாப்பு அளிக்கப்படும் என்பதுடன் மட்டுமே இருந்து விட்டார்.

ஏனெனில் தற்போதைய தேசிய சனநாயக கூட்டணி உடையும் அபாயம் உருவாகலாம் எனும் நிலை காணப்படுகின்றது. எதிர் காலத்தில் அதனை நிரப்பக் கூடியது அ.தி.மு.க.வாகக் கூட இருக்கலாம்.

எனவே தற்போது அவசரப்பட்டு தமிழக முதலமைச்சர் மீது பத்திரிகையாளர்கள் மீதான குற்றச்சாட்டிற்கு, நடவடிக்கை எடுப்பதன் மூலம் எதிர்கால கூட்டணியை இழந்து விடலாம் என்பது கூட காரணமாக இருக்கலாம்.

இதனால் மத்தியரசு எனும் நிலையில் பிரதமர் வாஜ்பாய் தமிழகத்தை கண்டிக்காத வரை தமிழகத்தில் மாற்றங்கள் ஏற்பட ஏதுவில்லை.

ஆனால், தற்போது தமிழகத்தில் பத்திரிகையாளர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் மட்டும் ஜெயலலிதா மீது நிலவவில்லை. இலவச மின்சாரத் தடை, மதுபானசாலைகளை அரசுரிமையாக்கியது போன்ற நடவடிக்கைகள் மூலம் மக்களிடையே அதிருப்தியை சம்பாதித்துக் கொண்டிருக்கின்றார்.

இதனால் எதிர்காலத் தேர்தலில் தமிழகத்தில் மீண்டும் முதலமைச்சர் ஆகுவரா... ஜெயலலிதா என்பதே இன்றைய வினாவாகும்.

# "உலகில் வாழும் யூதர்களுக்கு இஸ்ரேலே பாதுகாப்பான இடம்"

உலகின் பல நாடுகளில் குறிப்பாக ஐரோப்பாவில் யூத இனத்தவர்கள் மீதான தாக்குதல்கள் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றன. கடந்த ஆண்டுகளில் குறைவான எண்ணிக்கையில் இடம்பெற்று வந்த இத்தாக்குதல்கள் இந்த ஆண்டு பல நூற்றுக்



கணக்கில் அதிகரித்து வருகின்றன.

கிட்லர் காலத்திற்குப் பின்னர் தற்போது அதிகரித்து வரும் தாக்குதல்கள் தவிர்க்க முடியாமல் கிட்லரின் கொடுங்கோலை நினைவிற்குக் கொண்டு வருகின்றது. கிட்லரின் தாக்குதல்கள் போன்று இவை அமையாவிட்டாலும் ஐரோப்பாவில் பரந்து வாழும் யூத இனத்தவர்கள் மீது சமகாலத்தில் நடத்தபடும் இத்தாக்குதல்கள் ஐரோப்பாவில் யூதர்களின் இருப்பையே கேள்விக்குள்ளாக்கும் அளவிற்கு அமைந்துள்ளது. இத்தாக்குதல்களின் சமகாலத் தன்மையும் அதிகரிப்பு வேகமும் இஸ்ரேலிய ஆட்சியாளர்களுக்குத் தலைவலியையும் கொடுத்துள்ளது. இத்தாக்குதல்கள் குறித்து கண்டனங்களையும் கவலையையும் வெளியிட்டுள்ள இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன்,

**கெல்மன்**

"சர்வதேச ரீதியில் இஸ்ரேலியர்களுக்கெதிராக அதிகரித்து வருகின்ற எதிர்ப்புக்களிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டுமாயின் இஸ்ரேலுக்கு வருவதே அனைத்து யூதர்களுக்கும் பாதுகாப்பைக் கொடுக்கும். இஸ்ரேல் யூதர்களைப் பாதுகாக்கும். அதுவே யூதர்கள் பாதுகாப்பாகக் குடியிருக்க முடியுமான நிலம். ஐரோப்பிய நாடுகளில் அண்மைக் காலமாக யூதர்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. ஐரோப்பிய நாடுகளில் வசிக்கின்ற யூதர்கள் பலர் இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டும் கொலை செய்யப்பட்டும் வருகின்றனர். இதனால், ஐரோப்பிய நாடுகளில் யூதர்களால் பாதுகாப்பாக சுதந்திரமாக வசிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு வருகின்றது. ஆதலால் அவர்கள் நாடு திரும்புவதே சிறந்தது" என கோரிக்கை விடுத்துள்ளார்.

யூதர்களை நாடு திரும்புமாறு கோரிக்கைவிடும் அளவுக்கு பாரதூரமான நிலைமையை இத்தாக்குதல்கள் தோற்றுவித்துள்ளன.

கடந்த வாரம் துருக்கியில் யூதர்கள் மதச் சடங்கில் ஈடுபட்டிருந்தவேளை இரு ஆலயங்கள் மீது கார்க் குண்டு வெடிப்பை தீவிரவாதிகள் நடத்தியிருந்தனர். இதில் 25 யூத இனத்தவர் கொல்லப்பட்டதோடு 200 இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர். அத்துடன் பிரான்ஸ் நாட்டில் இவ்வாண்டு யூதர்களுக்கெதிரான தாக்குதல்கள் அதிகரித்துள்ளதாக அந்த நாட்டின் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. அது வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றின்படி இவ்வாண்டு யூதர்களுக்கெதிராக 400 தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக அது கூறியுள்ளது.

கடந்த வாரம் பிரான்சில் யூத மாணவர் கல்வி பயிலும் பாடசாலை ஒன்றும் தீயிட்டு கொழுத்தப்பட்டது. பிரான்சில் யூத இனத்தவர்களுக்கெதிரான தாக்குதல் அதிகரித்துள்ளதையடுத்து இதற்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றைக் கட்டுப்படுத்துவது எப்படியென்பது குறித்த ஆலோசனைக் கூட்டம் ஒன்றை பிரான்சிய அதிபர் ஜக்சிராக் பொலிஸ் உயர் அதிகாரிகளுடன் நடத்தியிருந்தார்.

அதுமட்டுமன்றி மேற்கு நாடுகளில் யூத இனத்தவர்களுக்கெதிரான தாக்குதல்கள் அதிகரித்துள்ளதையடுத்து கவலை தெரிவித்துள்ள இஸ்ரேலியப் பிரதமர் ஏரியஸ் ஷரோன் இத்தாக்குதல்களைக் கட்டுப் படுத்துவதற்காக ஆலோசனை மாநாடு ஒன்றையும் மேற்குலகத் தலைவர்களுடன் கடந்த வாரம் இத்தாலியில் நடத்தியிருந்தார்.



யூத இனத்தவர்களுக்கெதிரான தாக்குதல்கள் ஐரோப்பிய நாடுகளின் அரசாங்கங்களினால் கட்டுப்படுத்தப்படுகிறதோ இல்லையோ என்பது ஒரு புறம் இருக்க இத்தாக்குதல் சம்பவங்களுக்கு சர்வதேச அரசியல் பின்னணி உண்டா? என்ற கேள்வி எழுகிறது.

ஏனென்றால் துருக்கியில் இடம்பெற்ற இவ் இரண்டு தாக்குதல்களுக்கும் இஸ்லாமிய தீவிரவாத அமைப்பான அல்-ஹைதாவிற்கும் தொடர்பு இருப்பதாக நம்பப்படுகிறது. இது உண்மையானால் உலகின் பல பாகங்களிலும் உள்ள இஸ்லாமிய அமைப்புக்களுடன் தொடர்பு வைத்துள்ள அல்-ஹைதாவினால் யூதர்களுக்குத் தொடர்ச்சியான ஆபத்து இருக்கிறது என்றே கூறவேண்டும். இதேவேளை ஸ்லாமியர்களுக்கும் யூத இனத்தவர்களுக்கும் வரலாற்றுப் பகைவர்கள் இந்த வகையில் இஸ்லாமியர் பெரும் எண்ணிக்கையில் வாழும் துருக்கியில் யூத இனத்தவரின் இருப்பை கேள்விக்குள்ளாக்கும் வகையில் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த அடிப்படையில் பார்த்தால் இஸ்லாமியர் யூதர்கள் மீது வஞ்சம் தீர்க்கும் நடவடிக்கையை உலகமயப்படுத்தி விட்டார்களா என்று எண்ணத் தோன்றுகிறது. இஸ்ரேலுக்கும் சர்வதேச இஸ்லாமிய சமூகத்திற்குமிடையிலான அரசியல் கலாச்சாரத்தை இத் தாக்குதல்கள் பின்னணியாகக் கொண்டுள்ளன என்று கூறமுடியும். இதனால் இதைக் கிட்லர் காலத்திற்குப் பின் யூதர்கள் எதிர்கொண்டுள்ள பெரிய ஆபத்து என்றே கூறவேண்டும். இந்தப் பின்னணியில் பார்த்தால் ஐரோப்பாவில் யூத இனத்தவர்களுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்துக்களில் இருந்து அவர்களைக் காப்பாற்ற ஐரோப்பிய அரசுகளால் முடியுமா? அவர்கள் எடுக்கும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலன் தருமா? என்பதற்கு காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

# பொதுக்கட்டடங்களிலிருந்து படை வெளியேற்றம்; குறித்த சுற்றாடலில் மக்கள் மீள்குடியமரத் தடை!

(வடமராட்சி)

2000 ஆம் ஆண்டின் முற்பகுதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளையடுத்து படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த அம்பன் மத்திய மகப் பேற்று நிலைய வைத்தியசாலைக் கட்டடம் மற்றும் பருத்தித் துறைப் பிரதேச சபையின் பொது நூலக உப அலுவலக கட்டடங்களை படைத்தரப்பு நேற்று முன்தினம் மீளக்கையளித்துள்ளது.

ஆயினும் விடுவிக்கப்பட்ட இக் கட்டடத் தொகுதிகள் அமைந்துள்ள சூழலில் மக்களை மீளக் குடியமர படைத் தரப்பு தொடர்ந்தும் அனுமதி மறுத்துள்ளது.

கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக படையினரால் உயர் பாதுகாப்பு வலயமென அறிவிக்கப்பட்டுள்ள வடமராட்சி கிழக்குப் பகுதிகளினுள் உள்ளடங்கி இருந்த இக் கட்டடத் தொகுதிகளையே படைத் தரப்பு கையளித்துள்ளது.

அங்கு நிலை கொண்டிருந்த படையினர் வெளியேறி அயலில் உள்ள தனியார் கட்டங்களில் தற்போது நிலை கொண்டுள்ளனர்.

கட்டடக் கையளிப்பு நிகழ்வில் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியான தி.திருச்செல்வம், பருத்தித் துறை பிரதேச சபையின் செயலாளர் சிநடராஜா, வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் வி.வேலாயுதபிள்ளை மற்றும் பொறுப்பு பொது சுகாதார பரிசோதகர் எம். ரவிச்சந்திரன் உள்ளிட்ட பணியாளர்கள் குழுவொன்று கலந்து கொண்டது.

படைத்தரப்பில் பலாலி படைத் தலைமையலுவலகத்தைச் சேர்ந்த கேணல் சில்வாவும், மற்றும் நாகர் கோவில் பகுதிகளில் நிலை கொண்டுள்ள படைப்பிரிவுகளின் உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதேவேளை வைத்தியசாலையை மீள இயக்க வேண்டுமெனில் அவசர திருத்த வேலைகள் சில செய்து முடிக்கப்பட வேண்டுமென சென்று திரும்பிய அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் படையினரது உயர் பாதுகாப்பு வலயப்பகுதியினுள் அமைந்துள்ள இக்கட்டடத் தொகுதிகளில் பணிகள் மீள ஆரம்பிக்கப்பட்டாலும் மக்கள் சுமுகமாக வந்து செல்வதற்கான சூழல் ஏற்படுத்தப்படாவிட்டால் இவற்றை மீள இயக்குவதில் பலனேதும் ஏற்படப் போவதில்லையென அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.(27)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் தொற்று நோய் பரவுகிறது!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் அடை மழை காரணமாக மாவட்டம் பூராவும் தொற்று நோய்கள் பரவி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை பரவலாக மலேரியா, நெருப்புக் காய்ச்சல் மற்றும் வயிற்றோட்டம் போன்ற நோய்கள் பரவி வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் அநேகமான கிராமப் புறங்களிலேயே இந் நோய்கள் பரவி வருகின்றன. இந் நோய்கள் குறித்து விழிப்பாக இருக்குமாறு சுகாதாரப் பிரிவினர் பொது மக்களைக் கேட்டுள்ளனர்.

கிராமப் புறங்களிலுள்ள தாழ்ந்த பிரதேசங்களில்மழை நீர் தேங்கி நிற்பதனால் நுளம்புகளும் பரவிக் காணப்படுவதாக கிராம வாசிகள் தெரிவிக்கின்றனர்.

# கரிப்பட்ட முறிப்பு அ.த.க.வில் மாவீரர் நினைவு நிகழ்வு

மு/கரிப்பட்டமுறிப்பு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் கல்வி கற்று தேசவிடுதலைக்கு உரம் ஊட்டி மாவீரரான 2ஆம் லெப். அன்புமணியின் 8ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் வித்தியாலய அதிபர் து. பேசுதானந்தர் தலைமையில் நேற்று முன்தினம் மாலை 3.00 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் தேசியக் கொடியினை கரிப்பட்டமுறிப்பு தடைமுகாம் பொறுப்பாளர் ஜீவராஜ் ஏற்றி வைத்தார் பொது ஈகச் சுடரினை மேழிவன கமக்கார அமைப்புத் தலைவர் சிவனு ஏற்றி வைத்தார் 2ஆம் லெப் அன்புமணியின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலையினையும் ஈகச் சுடரினையும் அம் மாவீரரின் பெற்றோர் ஏற்றிவைத்தனர் தொடர்ந்து மண்டப நிகழ்வுகள் ஆரம்பமானது.

மண்டப நிகழ்வுகளின் வரிசையில் தலைமை உரையைத் தொடர்ந்து நினைவு உரைகளினை தமிழீழ மாணவர் அமைப்பு துணைப் பொறுப்பாளர் ஈழப்பிரியனும், பெரிய புளியங்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் நித்தியகலா வித்தியாலய ஆசிரியர்களான கு.பஞ்சலிங்கம் ந.சர்வேஸ்வரநாதன் ஆகியோரும் ஆற்றினர். தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் நிகழ்வுகளில், நினைவுரைகள், எழுச்சிப் பாடல்கள் என்பன இடம்பெற்றன. இறுதியாக நன்றியுரையினை கா.கைலாசபிள்ளை ஆசிரியர் ஆற்றினார்.

# பனம் விதை நடுகைத் திட்டம்

(ஒட்டுசுட்டான்)

மாவீரர் நாளை முன்னிட்டும் பனை வளத்தினை அபிவிருத்தி செய்யும் வகையிலும் பனம் விதைகள் நடப்பட்டன.

கடந்த புதன் கிழமை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்தி பகுதியினரால் வட்டக்கச்சிப் பிரதேசத்தில் பண்ணை முறை அடிப்படையில் மூன்று ஏக்கர் பரப்பளவில் மூவாயிரம் பனை விதைகள் நடுகை செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை கிளி ஊற்றுப் புலம் கிராமத்திலும் பத்துஏக்கர்களில்10 ஆயிரம் பனம் விதைகள் நாட்டப்பட்டு வருவதாகவும் பொருண்மிய செய்திக் குறிப்பொன்று குறிப்பிடுகின்றது. (05)

# இடை விலகிய மாணவர்களை இணைக்க நடவடிக்கை

யுனிசெவ்,றிடோ,தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினதும் அனுசரணையுடன் முல்லை பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தினால் பாடசாலைக்கு செல்லாது இடைவிலகிய மாணவர்களை இனங்கண்டு மீள பாடசாலையில் இணைத்து கல்வியைத் தொடரச் செய்யும் திட்டத்தின் கீழ் கரைதுறைப்பற்று பகுதிக்குட்பட்டவர்களில் மேற்படி நிறுவனத்தினால் 5 உறுப்பினர்கள் கொண்ட 08 குழுக்கள் அமைக்கப்பட்டு மேற்படி உறுப்பினர்களுக்கான பயிற்சி வகுப்பு அண்மையில் நடத்தப்பட்டது. மேற்படி பயிற்சி வகுப்பில் இடைவிலகிய மாணவர்களை இனங்கண்டு அம் மாணவர்களின் குறைபாடுகளைக் கேட்டறிந்து அம் மாணவர்களின் குடும்ப சூழலை அறிந்து மாற்று வழிகளைக் கொண்டு குறைகள் தீர்க்கப்பட்டு மாணவர்களின் கல்வியைத் தொடரச் செய்யும் வழிமுறை தொடர்பாக கருத்துரைகள் இடம் பெற்றது.

# திருமலையில் இருந்து வாடகைக்கு அழைக்கப்பட்ட வான் கடத்தல்

(வவுனியா செய்தியாளர்)

திருகோணமலையிலிருந்து வவுனியாவிற்கு வாடகைக்கு அழைத்து வரப்பட்ட வான் கெப்பிட்டிக் கொலாவவிற்கு அண்மையில் வைத்துக் கடத்தப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க் கிழமை மாலை 4.00மணியளவில் திருகோணமலையிலிருந்து வவுனியா செல்வதற்காக நான்கு பேர் கொண்ட குழு ஒன்று சொகுசுவான் ஒன்றினை வாடகைக்கு அழைத்துக் கொண்டு வவுனியா நோக்கிப் புறப்பட்டது. வான் ஹொறவப் பொத்தானை வீதி ஊடாக கெப்பிட்டிக் கொலாவ சந்தியைத் தாண்டி காட்டுப் பகுதியில் வந்து கொண்டிருந்த போது சிறுநீர் கழிப்பதற்காக வானை நிறுத்துமாறு சாரதியைக் கேட்டுக் கொண்டனர். சாரதி வானை நிறுத்திய போது நால்வரும் சாரதியை பலமாகத் தாக்கி விட்டு அவரை வானில் இருந்து இறக்கிவிட்டு வானைக் கடத்திச் சென்றுள்ளதாக சாரதி வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.(10)

# வட்டக்கச்சி செல்லும் பிரதான வீதி சீர்கேடு; பயணிகள் போக்குவரத்து பெரும் பாதிப்பு!

## புனரமைப்புப் பணிகள் இன்மையே காரணம்

(அலுவலக செய்தியாளர்)

**கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சி பிரதேசத்திற்குச் செல்லும் பிரதான வீதி போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் மிக மோசமாகச் சேதமடைந்துள்ளது. இந்த வீதி நீண்ட காலமாக புனரமைப்புகள் செய்யப்படாது புறக்கணிக்கப்பட்டு வந்தமையாலேயே இந்த அவலம் ஏற்பட்டுள்ளது.**

நீண்ட காலமாக புனரமைப்பு மேற்கொள்ளப்படாமையின் காரணத்தால் அவ்வீதியூடாகப் பயணிக்கும் மக்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கிய வண்ணமே பயணத்தினை மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக, கோவிந்தன் கடைச் சந்தியிலிருந்து வட்டக்கச்சி பொதுச் சந்தை வரை செல்லும் வீதி மிக மோசமான நிலையில் பாதிப்படைந்துள்ளதன் விளைவாக குன்றும் குழியுமாக காட்சியளிப்பதுடன் வீதியில் குழிகள் அற்ற பகுதியினை காண்பதென்பதே அரிதாகவுள்ளது.

இதன் காரணமாக வாகனங்கள் இவ்வீதியினால் பயணிக்கும் பொழுது சிலவேளைகளில் குடைசாய வேண்டிய அபாய நிலைமையும் தோன்றி வருவதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

நேற்றைய தினம் வட்டக்கச்சிப் பகுதியில் மேற்படி பிரதான வீதியில் கல் ஏற்றி வந்த பார ஊர்தியொன்று வீதியருகாமையில் குடைசாய்ந்திருந்ததனைக் காணக் கூடியதாக இருந்தது.

அதேபோன்று சில தினங்களுக்கு முன்பு கோவிந்தன்கடைச் சந்திக்கருகாமையில் பாரிய கனரக வாகனமொன்றும் குடைசாய்ந்தமை குறிப்பிடத்தக்கது.

மற்றும் மேற்படி பாதையூடாகவே இராமநாதபுரம், கல்மடுநகர் வட்டக்கச்சிப் பிரதேச மக்கள் முக்கிய அலுவல்களை மேற்கொள்ளும் பொருட்டும், அவசர சிகிச்சையினைப் பெறும் பொருட்டும் கிளிநொச்சிப் பகுதிக்குச் செல்ல வேண்டியுள்ளது.

இவ்வீதியினைப் புனரமைத்து இப்பகுதி மக்களின் அவலத்தினைப் போக்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வரமாட்டார்களாவென இப்பகுதி வாழ் மக்கள் அங்கலாய்க்கின்றனர்.(சோ)

## கருத்தரங்கு

சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்கு, புழு நோய்க்கான சிகிச்சை முறை என்பன கடந்த திங்கட்கிழமை பாடசாலைகளில் மல்லாவி சுகாதார அதிகாரிகளினால் நடத்தப்பட்டுள்ளது. கொல்லவிளாங்குளம் அ.த.க பாடசாலை, அம்பாள்புரம் அ.த.க. பாடசாலை என்பவற்றிலேயே இந்த புழு நோய் சிகிச்சை முறையும் மற்றும் விழிப்புணர்வுக் கருத்தரங்கும் நடைபெற்றுள்ளது.

## தமிழீழ மாவீரர் நாளன்று பிறக்கும் குழந்தைகளுக்கு சேமிப்புக் கணக்கு

### - பதிவை 28இல் மேற்கொள்க

(ஒட்டுசுட்டான்)

மாவீரர் நாளை முன்னிட்டு கிராமிய அபிவிருத்தி வங்கி கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் எதிர்வரும் 26ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணி தொடக்கம் 27ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணி வரைக்குள் பிறக்கும் குழந்தைகளின் பெயரில் ரூபா ஐந்நூறு மட்டும் பெறுமதியான தளிர் சேமிப்புக் கணக்கினை ஆரம்பிக்கவுள்ளது.

எனவே குழந்தைகள் பிறந்ததும் இது தொடர்பான பதிவுகளை மகப்பேற்று மருத்துவமனைகளிலோ அல்லது கிராமிய அபிவிருத்தி வங்கிக் கிளைகளிலோ நவம்பர் 28ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு கிராமிய அபிவிருத்தி வங்கி மேலாளர் கேட்டுக் கொள்கின்றார். (05)

## பாலம் அமைக்கப் போடப்பட்ட நீர்வடிகால் குழாய்கள் திருட்டு!

முல்லைத்தீவு-புதுக்குடியிருப்பு வீதியில் பாலம் அமைப்பதற்காக போடப்பட்ட நீர்வடிகால் குழாய்கள் களவாடப்பட்டுள்ளன. இதனால் பாலங்கள் அமைக்க முடியாதுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

வீதி அபிவிருத்திக்கு மக்கள் பூரண ஒத்துழைப்பைத்தர வேண்டும் என்றும், தார் ஊற்றப்பட்ட வீதிகளை வெட்டுதல், கிடங்குகிண்டுதல் போன்றவைகளைத் தவிர்க்க வேண்டும் என்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (20)

## வாழ்வாதார செயற்திட்டத்தில் 276 பயனாளிகளுக்கு உதவி

(அலுவலக செய்தியாளர்)

சிறுவர் பாதுகாப்பு நிறுவன நிதியுதவியில் கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக ஏற்பாட்டில் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களூடாக செயற்படுத்தப்படும் வாழ்வாதார செயற்திட்டத்தில் தம்பகாமம் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 276 பயனாளிகளுக்கான விதை, தானிய நடுகைப் பொருட்கள், கருவிகள், உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு 21.11.2003ஆம் திகதி காலை 11 மணிக்கு பச்சி லைப் பள்ளி அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவன கேட்போர் கூடத்தில் நிறுவன தலைவர் கார்த்திகேசு தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் சிறுவர் பாதுகாப்பு நிதிய கிளிநொச்சி மாவட்ட திட்ட அலுவலர் நகுலேஸ்வரன் கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்ட இணைப்பாளர் ஜெறாட் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக ஆளணி அலுவலர் சுவாமிநாதன், விவசாய போதனாசிரியர் சவுந்தரராஜன், தம்பகாமம் கிராம அலுவலர் கனகரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டு செயற்திட்ட உரையினையும் சிறப்பு உரையினையும் வழங்கினர். இத் திட்டத்தில் பயன்பெறும் 276 பயனாளிகளுக்கு சிறுதானிய செய்கை,பழ மரக்கன்று செய்கை விடயமான அடிப்படை பயிற்சி வகுப்பினை விவசாய போதனாசிரியர்களால் விரிவான விளக்கங்களுடன் வழங்கப்பட்டது. மேலும் இத்திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகளுக்கு பயறு, கௌப்பி, எள்ளு, தென்னங்கன்றுகள், தேசி போன்ற விதைகள் நடுகைப் பொருட்களுடன் மண்வெட்டி, வாளி போன்ற கருவி உபகரணங்களும் செயற்திட்ட முன்னெடுப்புக்களுக்கு ரூபா 1000 நிதியும் வழங்கப்பட்டன மேற்படி வாழ்வாதார செயற்திட்டத்தினூடாக கிளிநொச்சி மாவட்டத்தில் தம்பகாமம், கனகாம்பிகைக் குளம்,ஜெயபுரம் வடக்கு தெற்கு,செல்வா நகர் கிராமங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 600 பயனாளிகளும் பயன்பெறவுள்ளனர். சிறுவர்களின் விருத்திக்கேற்ப ஒரு பாதுகாப்பான வீட்டுச் சூழலை உருவாக்குவதற்கும் மக்களின் நிலையான அபிவிருத்திக்கு முன்னோடியாக இத்திட்டம் அமைவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (லோ)

## கையடக்கத் தொலைபேசிகள், ஹெரோயின் நீர்கொழும்பு சிறைச்சாலையில் இருந்து மீட்பு

(கொழும்பு)

நீர்கொழும்பு சிறைச்சாலையிலிருந்து 10 கையடக்கத் தொலைபேசிகள், ஹெரோயின் போதைப் பொருட்கள், ஏழாயிரம் ரூபா பணம் என்பன மீட்கப்பட்டிருப்பதாக சிறைச்சாலை ஆணையாளர் றூமிமர்ஜூக் வியாழனன்று கூறியுள்ளார்.

கடந்த புதன் கிழமை இரவு நீர்கொழும்பு சிறைச்சாலையினை சுற்றி வளைத்து தேடுதல் நடத்திய போதே மேற்படி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

கையடக்கத் தொலைபேசிகள் நிலத்துக்குக் கீழ் புதைக்கப்பட்டும், போதைப் பொருட்கள் தண்ணீர் குழாய் ஒன்றிற்குள் மறைக்கப்பட்டும் இருந்ததாக தேடுதல் மேற்கொண்ட பொலிஸ் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மீட்கப்பட்ட கையடக்கத் தொலைபேசிகளை அங்கு சிறைவாசம் செய்யும் பாதாள உலக கோஷ்டியினரே பாவனைக்குட்படுத்தி வந்ததாகவும் பல இரகசியத் தகவல்கள் சிறைச்சாலையில் இருந்தே அனுப்பப்படுவதாகவும் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

மீட்கப்பட்ட பொருட்கள் தொடர்பாக விளக்க மறியலில் உள்ள பல சிறைக் கைதிகள் விசாரணைக்குட்பட்டு வருகின்றனர்.

## சுகாதார சேவை ஊழியர்கள் மீண்டும் பணி நிறுத்தம்?

சுகாதார ஊழியர்கள் மீண்டும் பணி நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக எச்சரித்துள்ளனர்.

தமது சம்பள முரண்பாட்டைத் தீர்க்கும் வகையிலானஏற்பாடு நவம்பர் மாதம் 4ஆம் திகதிக்கு முன்னர் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டிருந்தது. எனினும் அது நிறைவேற்றப்படவில்லை. எனவே எதிர்வரும் 25ஆம் திகதிக்குப் பின்னர் தாம் பணிநிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக ஊழியர்கள் எச்சரித்துள்ளனர். இந்த ஊழியர்கள் 21ஆம் திகதி சுகாதார அமைச்சின் முன்னால் அடையாளப் போராட்டம் ஒன்றை நடத்தினர். (32)

## இலங்கைக்கு ஜப்பான் உதவி வழங்க சமாதானப் பேச்சு ஆரம்பமாக வேண்டும்

### மிலிந்த மொறகொடவிடம் ஜப்பானிய அமைச்சர்

இலங்கைக்கு தொடர்ந்தும் ஜப்பான் உதவியளிக்கத் தயாராக உள்ளது. எனினும் அதற்கு முன்னர் சனாதிபதிக்கும், பிரதம மந்திரிக்கும் இடையிலான அரசியல் நெருக்கடி நிலை தவிர்க்கப்பட்டு தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என ஜப்பான் நாட்டு வெளிவிவகார அமைச்சர் யூரிகோ கவாகுச்சி தெரிவித்துள்ளார் ஐந்து நாள் விஜயத்தை மேற் கொண்டுள்ள அமைச்சர் மிலிந்த மொறகொடவிடம் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.


## முக்கிய அறிவிப்பு

ஒட்டுசுட்டான் வீதி புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள தென்றல் இலத்திரனியல் நிறுவனத்தில் (தென்றல் கடை) 01-06-2003 இற்கு முன்பு திருத்தக் கொடுத்த இலத்திரனியல் பொருட்கள், மணிக்கூடுகள் என்பவற்றை மீளப் பெறாதவர்கள் எதிர்வரும் 20-12-2003இற்குள் உரிய ஆவணத்துடன் சமுகம் தந்து அப்பொருட்களை மீளப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். மேற்குறித்த திகதிக்குள் மீளப் பெறப்படாத பொருட்களுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல என்பதையும் தெரியப்படுத்திக் கொள்கிறோம்

நிர்வாகம்.

(3733)

## தமிழீழ வைப்பகம்

# பணிநிலை வெற்றிடம்

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**பணி நிலை** :- அலுவலர் (பயிலுநர்)

**தகைமைகள்** :- ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் ஏற்றுக் கொள்ளக்கூடிய பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

**அல்லது**

ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமா சான்றிதழைப் (HNDA) பெற்றிருத்தல் வேண்டும்.

**மாதாந்த ஊதிய அளவுத் திட்டம்** :- 4,500 + 4,000

**அகவை எல்லை** – 32 வருடங்களுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

வேண்டுகைகள் யாவும் உரிய படிவத்தில் நிறைவு செய்யப்பட்டுக் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் **"ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை- அலுவலர் (பயிலுநர்)"** எனக் குறிப்பிடப்பட்டு 2003-12-15 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பாகக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைத்தல் வேண்டும். வேண்டுகைப் படிவங்களையும், மேலதிக விளக்கங்களையும் தமிழீழ வைப்பகத்தின் எல்லாக் கிளைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

**மேலாளர்,**
**ஆளுகைப் பகுதி,**
**நடுவப் பணியகம்,**
**தமிழீழ வைப்பகம்.**

குறிப்பு : நிறைவு செய்யப்பட்ட வேண்டுகைகளை பதிவுத் தபாலில் (மேலாளர், ஆளுகைப் பகுதி, நடுவப் பணியகம், தமிழீழ வைப்பகம், யாழ். சாலை, கரடிப்போக்கு, கிளிநொச்சி எனும் முகவரிக்கு) நேரடியாகவோ அல்லது தமிழீழ வைப்பகக் கிளைகளினூடாகவோ அனுப்பிவைக்கலாம்.

(சி-8910)



## சிந்தனைக்கு

இரத்தம் சிந்தி, வியர்வை சிந்தி, கண்ணீர் சிந்தி தாங்கொணாத் துன்பத்தின் பரிசாகப் பெறுவது தான் சுதந்திரம்.

தமிழீழத்தேசியத் தலைவர்

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை, கிளிநொச்சி. 23-11-2003

# அமைதி ஏற்படுமா!

"இலங்கையில் முஸ்லிம்கள் முதல் முறையில் ஆயுதம் ஏந்திப் போராடும் நிலைக்கு வந்துள்ளனர். இதற்கு கிழக்கு முஸ்லிம்கள் மீதான தமிழீழ விடுதலைப்புலிகளின் கடத்தல் மற்றும் தர்பாரே காரணம்" என்ற சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவின் குற்றச்சாட்டானது இலங்கையில் அமைதி தோன்றுமா? இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று ஏற்படுமா? என்ற கேள்வியை மேலும் வலுப்படுத்தும் ஒன்றாகவே கொள்ளத்தக்கது.

சனாதிபதி சந்திரிகாவின் இக்குற்றச்சாட்டானது இலங்கையில் முஸ்லிம்கள் -குறிப்பாக வடக்கு-கிழக்கில் ஆயுதப் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு சனாதிபதி சந்திரிகாவே உந்து சக்தியாகவும் ஆயுததளபாட உதவிகளைச் செய்வதற்குத் தயாராக இருப்பதை போன்றதொரு தோற்றப்பாட்டையும் உருவாக்குவது போன்றதாகவே உள்ளது. அதாவது முஸ்லிம்கள் ஆயுதப்போராட்டம் ஒன்றைத் தொடங்கின் அதனை நியாயப்படுத்துவதாகவுள்ளது.

கிழக்கு மாகாணத்தில், முஸ்லிம் மக்களை அரசியற் பகடைக்காய்களாக; தமிழ் மக்களின் விரோத சக்தியாக வளர்த்தெடுக்க சிங்கள ஆட்சியாளர்கள் தற்பொழுதுதான் முற்படுகின்றனர் என்பதல்ல. தமிழ் மக்கள் தமது உரிமைக்கான போராட்டத்தை ஆயுத ரீதியில் முன்னெடுக்கத் தொடங்கியபோதே இத்தகையதொரு அணுகுமுறையை அவர்கள் கைக்கொள்ளத் தொடங்கியிருந்தனர் என்பதே உண்மையாகும்.

எவ்வாறு தமிழர் தாயகப்பகுதியில் சிங்களக் காடையர்களையும், கிரிமினல்களையும் குடியேற்றம் என்ற போர்வையில் ஆயுததாரிகளைக் குடியேற்றி ஆக்கிரமிப்பிற்கும், வன்முறைகளுக்கும் வித்திட்டார்களோ அதேபோன்று, தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்திற்கு எதிராக முஸ்லிம் காடையர்களையும், குண்டர்களையும் ஆயுததாரிகளாக்கி தமிழ் இன அழிப்பிற்கும், சிதைப்பிற்கும் சிங்கள ஆட்சியாளர்கள் காரணமாக இருந்துள்ளனர். இதற்கு மறைமுகமாகவேனும் சில முஸ்லீம் தலைமைகள் உடந்தையாகவே இருந்தனர்.

சிறிலங்கா ஆட்சியாளர்களின் இத்தகையதொரு அணுகுமுறையின் பின்பே வடக்கு-கிழக்கில் தமிழ் முஸ்லிம் மக்கள் உறவு பாதிப்பிற்கு உள்ளானது. ஒருவர் மீது ஒருவர் ஐயுறவும், நம்பிக்கையீனமும் கொள்ளவேண்டிய நிலையும், பகைவர்கள் போன்றதொரு மன உணர்வும் ஏற்படவேண்டியதாயிற்று. இதன் காரணமாக விரும்பத்தகாத சம்பவங்கள் பல நிகழவேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் உருவானது.

ஆனால், 2002இல் யுத்த நிறுத்த உடன்பாடு கைச்சாத்தாகிய பின்னர், தமிழ்-முஸ்லிம் மக்கள் உறவில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சில தீய அரசியற் சக்திகள் வளர்ந்துவரும் உறவைச் சிதைப்பதற்குத் திட்டமிட்ட ரீதியில் செயலாற்றினும் இருதரப்பு மக்களினதும் உறவு நிலை மேம்பட்டு வருகின்றது என்பதை எவரும் நிராகரிக்க முடியாது.

உறவுநிலை மேம்பட்டுவரும் இத்தகையதொரு சூழ்நிலையில் தான் முஸ்லிம்கள் ஆயுதம் தாங்கிப் போராட வேண்டியசூழ்நிலை உருவாகி வருகின்றது எனச் சனாதிபதி சந்திரிகாவின் எச்சரிக்கை வெளிவந்துள்ளது. இது முஸ்லிம் மக்களைத் தவறான வழியில் இட்டுச் செல்வது மட்டுமல்ல, அவர்களை பலிக்கடாக்களாக்கி இலங்கையில் அமைதி என்பதை அறவே இல்லாது ஒழிப்பதற்கானதொரு நடவடிக்கைகளாகவே இருக்க முடியும்.இதனைச் சமாதான விரோத நடவடிக்கை என்று கூடக் கூறலாம்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க போன்ற இனவாத ஆட்சியாளர்கள் பேரினவாதத்தின் துணையோடு, தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்தை இராணுவ ரீதியில் தோற்கடிக்க மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தமை வெளிப்படையானது.

யுத்தநிறுத்த காலத்தில் கூடச் சிறிலங்கா இராணுவத்தில் இருந்து தப்பியோடும் ஆயுதப் படையினரின் தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டதாக இல்லை. மாறாக, அதிகரித்த போக்கிலேயே அது உள்ளது. இந்நிலையில், முஸ்லிம்கள் யுத்தத்தில் ஈடுபடவேண்டிய சூழ்நிலை உருவாகிவருகிறது என்ற சனாதிபதி சந்திரிகாவின் அறிவிப்பானது முஸ்லிம்களை யுத்தத்தில் ஈடுபடுத்த அவர் தயாராகி வருவதையே வெளிக்காட்டுகின்றது.

சனாதிபதி சந்திரிகா போன்றவர்களின் அபிலாசைகளுக்கு சில முஸ்லிம் தலைமைகளும் ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவே உள்ளன. அதிகாரம், அந்தஸ்து என்றிற்காக போட்டியிடும் முஸ்லிம் தலைமைகள் முஸ்லிம் மக்களைத் தவறான வழியில் இட்டுச் செல்வதன் மூலம் தமது அபிலாசைகளை நிறைவேற்றிக்கொள்ளப் பார்க்கின்றன. இது முஸ்லிம் மக்களுக்கு நன்மை தேடித்தரப்போவதில்லை. தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் வளர்ச்சி கண்டதற்கும், இன்னல்களைத் தாண்டி நிலைத்து நிற்பதற்கும், தொடர்வதற்கும், தனியாகப் போராளிகளின் அர்ப்பணிப்பு, தியாகம் என்பவை மட்டுமல்ல, அப்போராட்டத்திற்கான தார்மீக ரீதியிலான நியாயப்பாடும் காரணமாகும்.

இதேவேளை, இன்று முஸ்லிம் மக்களை ஆயுதப் போராட்டத்தில் இறக்கிவிட முற்படுபவர்கள் இப்போராட்டத்திற்கான தார்மீக பலம் உண்டா என்பதற்கு, அப்பால், இப்போராட்டம் தனியாக கிழக்கிற்கானதாகவோ அன்றி வடக்கிற் கானதாகவோ மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதாக வைத்துக்கொள்ளலாம் எனக் கருதின், அது தவறான மதிப்பீடாகவே இருக்கும். ஏனெனில், இது இலங்கை பூராவிற்குமானதாவது தவிர்க்கமுடியாததாகிவிடும். மறுவளமாக முஸ்லிம்களும் ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ளுதல் வேண்டும். அதாவது போராட்டத்திற்கு எதிரான விளைவுகளும் இலங்கை பூராவிற்குமானது என்பதே அது.

## தமிழீழ மாவீரர் நாள் 2003

# போற்றப்பட வேண்டிய பண்பாடாகட்டும்

எமது தாயகமாம் தமிழீழ நாட்டின் தேசிய நாட்களில் மாவீரர் நாள் மிக முக்கியமானதாகும். மாவீரர் நாள் என்பது, தமிழீழத்தின் விடிவிற்காகவும், உயர்விற்காகவும் உழைத்து உயிரைத் தற்கொடையாக்கி ஈந்து, இந்த மண்ணுக்கே உரமாகி விட்டவர்களினதும் எமது மூச்சுடன் கலந்து விட்டவர்களினதுமாகிய நினைவு நாளாகும்.

உங்கள் உயிரிலும் மேலான குழந்தைகளும், எமது சக போராளிகளுமான இம் மாவீரர்களின் தியாகம், அவர்களின் உணர்வுகள், இலட்சிய தாகம், கனவுகள் என்பன எம்மால் மறக்கப் படமுடியாதவையாகும் புனிதத்தன்மை வாய்ந்ததுமாகும் காலம்காலமாக நினைவு கூர்ந்து என்றும் போற்றப்பட வேண்டியவையாகும். இம்மாவீரர்களின் நினைவுகள் என்றும் எம்மை வழி நடாத்தும் உந்து சக்தியாக இருக்கும் மாவீரர்களது இத்தகைய நினைவுகூரல் என்பது, ஒரு நிகழ்வாக இருந்து விடாது. எமது நாட்டு மக்களின் வரலாற்றுச் சுவடியாகவும், பண்பாட்டுக்குரியவையாகவும் வளர்ந்து வரவேண்டும். இந்த எமக்குரிய உயரிய நிகழ்வை தத்துவார்த்தமாகவும் உணர்வுபூர்வமாகவும் நிலைநாட்டுவதற்காக எமது தமிழீழ மக்கள் அனைவரினதும் மனமுவந்த ஒருகிணைந்த பங்களிப்புக்களை வேண்டி நிற்கின்றோம்.

**தமிழீழ மாவீரர் பணிமனை.**

# சமாதான முயற்சிகளை சீர்குலைக்க அனுராவின் பின்னணியில் தீவிரமுயற்சி

## -கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன

(கொழும்பு)

சனாதிபதியின் சகோதரரான அநுரா பண்டார நாயக்க வின் பின்னணியில் சமாதான முயற்சிகளை சீர்குலைக்கவும் மீண்டுமொரு பாரிய யுத்தத்தை முன்னெடுக்கவும் சில சக்திகள் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றன.

இவ்வாறு புதிய இடது சாரி முன்னணியின் தலைமைக்குழு உறுப்பினரும், மேல் மாகாண சபை உறுப்பினருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன கூறியுள்ளார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாக கொழும்பு நிப்போன் ஹோட்டலில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

சனாதிபதி மூன்று முக்கிய அமைச்சுக்களையும் பொறுப்பேற்கக் காரணம் தானும் இச் சமாதானப் பேச்சுவார்த்தையில் இணைந்து கொள்வதற்காக அல்லது சமாதானப் பேச்சுவார்த்தைக்கு இடையூறு செய்யும் நோக்கத்திலாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திடம் 130 ஆசனங்கள் இருக்கும் போது ஏன் அவர்கள் தேர்தலொன்றிற்குச் செல்ல வேண்டும். அவ்வாறே ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றாலும் சனாதிபதி மாறப்போவதில்லை.

அத்துடன் தேர்தல் ஒன்று நடைபெற்று பொதுசன ஐக்கிய முன்னணி தனியாகப் போட்டியிடுமாயின் அக்கட்சி படுதோல்வி அடையும்.

ஜே.வி.பி.யுடன் இணைந்து போட்டியிட்டால் ஓரளவு வெற்றி பெற்றாலும் அதன் மூலம் பாராளுமன்றத்தில் பல இனவாதிகள் உட்புகுவார்கள்.

தேசிய அரசாங்கம் ஏற்படுமாயின் உலக மயமாக்கல் விடுவிக்கப்படுவதுடன் விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். அதற்காகவே நாம் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றோம்.

புரிந்துணர்வு உடன்படிக்கையை முறிவடையச் செய்யக் கூடாது. விடுதலைப்புலிகளினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகசபை திட்டவரைபை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு அதற்காக நம்பிக்கையுடன் செயற்படவேண்டும்.

பாதுகாப்புத் தொடர்பாகவும், சமாதானம் தொடர்பாகவும், இருதலைவர்களும், இரு வேறு கருத்துக்களைக் கொண்டுள்ள நிலையில் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச செல்ல முடியாது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# சனாதிபதி பாதுகாப்புப் பிரிவு பொறுப்பதிகாரி மீதான வழக்கில் சாட்சிகளுக்கு நீதிமன்று பிடியாணை!

(கொழும்பு)

சனாதிபதி பாதுகாப்புப் பிரிவுப பொறுப்பதிகாரி நிஹால் கருணாரட்ணவிற்கு எதிரான வழக்கில் சாட்சிகள் நீதிமன்றில் ஆஜராகாமையினால் சாட்சிகளுக்கெதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

2001ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் பிரச்சாரக் காலத்தில் ஹங்குராங்கெத்த பகுதியில் அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்கவின் ஆதரவாளர்களைத் தாக்கியதுடன் விரட்டியடித்தமை, குழப்பம் விளைவித்தமை, வாகனங்களைத் தாக்கிச் சேதப்படுத்தியமை, போன்றவற்றோடு மதுரப்பப் பொலிஸ் அதிகாரியைப் பயமுறுத்தியமை தொடர்பாகவே இவ்வழக்குத் தொடரப்பட்டது.

இவ்வழக்கில் சனாதிபதி பாதுகாப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி பயமுறுத்தியமை தொடர்பாகவே இவ்வழக்கு தொடரப்பட்டது. இவ்வழக்கில் சனாதிபதி பாதுகாப்புப் பொறுப்பதிகாரி உட்பட பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த 12 பேருக்கு எதிராக குற்றம் சுமக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வழக்கு கண்டி மேல் நீதிமன்ற நீதிபதி டீ.எஸ்.எல். லேகம்வசம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது விசாரணை தினம் என தெரிந்திருந்தும் சாட்சிகளில் நான்கு பேரில் மூன்று பேர் நீதி மன்றத்தில் ஆஜராகவில்லை. இவர்களுக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டதுடன், வழக்கு 2004ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

சந்தேக நபர்கள் சார்பாக சனாதிபதி சட்டத்தரணி விஜய விக்கிரமரட்ன, எஸ். காரியவசம். திருமதி தம்மிகா ஆரியதாச, எஸ்.சுரவீர ஆகிய சட்டத் தரணிகள் ஆஜராகியுள்ளார்கள்.

## அச்சுறுத்தல்

(கொழும்பு)

பொதுசன ஐக்கிய முன்னணியின் முன்னைய பாராளுமன்ற உறுப்பினர் புத்திரசிகாமணி வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் வியாழனன்று கலந்து கொள்வதற்குப் பாராளுமன்றத் திற்கு வந்த பொழுது பொ.ஐ.மு. பாராளுமன்ற உறுப்பினர்கள் அவரை இடைமறித்து கடும் சொற்களால் ஏசி உள்ளனர். இதில் 15 பொதுசன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்கள் சம்பந்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதிய ஜப்பானியத்தூதுவராக அக்கியோ சூடா நியமனம்

(கொழும்பு)

இலங்கைக்கான புதிய ஜப்பானிய தூதுவராக அக்கியோசூடா நியமனம் பெற்றுள்ளதாகக் கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதரகம் அறிவித்துள்ளது. கடந்த 3 வருடங்களாகக் கொழும்பில் ஜப்பானியத் தூதுவராகக் கடமையாற்றிய செய்ச்சிரோ ஒட்சுகா தமது சேவைக்காலத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியதையடுத்தே புதிய தூதுவராக அக்கியோ சூடா நியமனம் பெற்றிருக்கின்றார்.

# 64ஆயிரம் சிறிலங்காப் பொலிசாரில் 640 பேரே தமிழ் உத்தியோகத்தர்கள்!

(கொழும்பு)

தற்பொழுது சிறிலங்கா பொலிஸ் திணைக்களத்தில் 64,000 உத்தியோகத்தர்கள் கடமை புரிகின்றனர். இதில் 640 தமிழ் உத்தியோகத்தர்கள் மட்டுமே கடமை புரிகின்றனர்.

இதனால் வட-கிழக்கில் தமிழ்மொழி பேசும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மிகவும் குறைவாக உள்ளபடியால் தமிழ் மொழியில் விசாரணைகள் மேற்கொள்வது மிகச் சிரமமாக உள்ளதெனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. தமிழும், சிங்களமும் அரச கரும மொழியாக உள்ளதால் மேற்கூறிய பிரதேசங்களுக்கு சுற்றறிக்கைகள் சிங்கள மொழியால் அறிவிக்கப்பட்டு வருகின்றதென மொழிபெயர்ப்புத் திணைக்களத் தலைவர் டப்ளிவ் குணசேகர பொதுக் கூட்டம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

-சிங்கள கட்சிகள் தேசிய அரசு அமைப்பின்-

# தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைந்து எதிர்க் கட்சியாக செயற்படுவோம்

## - அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான்

(கொழும்பு)
இரு பெரும் கட்சிகளும் கூட்டுச் சேர்ந்து தேசிய அரசாங்கத்தை அமைக்க தீர்மானித்திருப்பதால் முடிந்ததை எல்லா தமிழ்க் கட்சிகளும் சேர்ந்து எதிர்க் கட்சியாக செயற்படுவதுடன் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்போம் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் டெயிலி மிரருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சந்திரிகாகுமாரதுங்கவுக்கும் இடையிலான தேசிய அரசாங்கம் அமைப்பது சம்பந்தமான பேச்சுவார்த்தையால் சமாதானத் திட்டம் பின்தள்ளப்பட்டு விட்டதாக அவர் மேலும் கூறினார். இனப்பிரச்சினைக்கு இறுதியான அரசியல் தீர்வை அரசாங்கம் கொண்டு வருமானால் அவற்றிற்கு ஆதரவாகத் தமிழ்க் கட்சியினர் இயங்கும் என இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். அதுமட்டுமன்றி எதிர்க்கட்சியாக செயற்பட்டு தமிழீழ விடுதலைப்புலிகள் மேற்கொள்ளும் அரசியல் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பேன் என அவர் மேலும் கூறினார்.

# வடக்கு-கிழக்கு மக்களுக்கு உரிய நிவாரணம் கிட்டவில்லை!

## - வ.செ.திட்டம் குறித்து மாவை சேனாதிராஜா

(கொழும்பு)
அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் வடக்கு கிழக்கு மக்களுக்கு உரிய நிவாரணங்கள் கிடைக்கவில்லை என தமிழ்த் தேசிய அமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

இன்று பாராளுமன்றத்தில் வரவு- செலவுத் திட்ட 2ம் வசிப்பின் விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய அவர், நாட்டில் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் சுமார் 15 இலட்சம் பேருக்கு இந்த வரவு-செலவுத்திட்டத்தின் மூலம் நிவாரணங்கள் எவையும் கிடைக்கவில்லை. அரச ஊழியர்களுக்கும் ஓய்வூதியப் பெறுபேறுகள் கிடைத்துள்ள 10வீத உயர்வு போதுமானதல்ல.

இப்16 ஆயிரம் ரூபாவரை மாதவேதனமாகப் பெறுவோருக்கு மாத்திரமே சிறந்த உயர்வாகும்.

வடக்கு-கிழக்கில் விவசாயிகள் தமது விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல வழியின்றி வாழ்கின்றனர். எனவே அவர்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்படுவதையும் மாவை சேனாதிராஜா சுட்டிக்காட்டினார். (32)

# மாரப்பனவிற்கு எதிரான வழக்கு

(கொழும்பு)
புகையிரத சேவையின் முன்னாள் முகாமையாளர் பிரியந்தசில்வா போக்குவரத்து அமைச்சர் திலக் மாரப்பனவிற்கு எதிராக உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

புகையிரத அதிகார சபை அமைப்பதை அடுத்துத் தம்மை பதவியில் இருந்து இளைப்பாறச் செய்தமையை ஆட்சேபித்தே இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (32)

- சபாநாயகருக்கு எதிரான -

# நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத் திகதி குறித்து சர்ச்சை

(கொழும்பு)
சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மான, விவாதத் திகதி தொடர்பில், கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச நேற்று முன்தினம் கூட்டத்தில் இருந்து வெளியேறினார். நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தின்போது எதிர்வரும் 27ஆம் 28ஆம் திகதிகளில் இந்தப் பிரேரணை விவாதங்களுக்கு ஒதுக்க வேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்திருந்தார். எனினும் வரவு-செலவுத்திட்டம் விவாதத்துக்கு மத்தியில் இரண்டு தினங்களை இதற்கென ஒதுக்க முடியாது என அக்கட்சியினர் கூறினர். இதனையடுத்து இருதரப்புக் கிடையில் குழப்பநிலை உருவானது. (32)

# மட்டக்களப்பு பிரதேசத்தில் டெங்கு நோய் அபாயம்

## களுவாஞ்சிக்குடியில் ஒருவர் மரணம்

மட்டக்களப்பு பிரதேசத்தில் டெங்கு நோய் பரவல் அபாயம் ஏற்பட்டிருப்பதாக சுகாதார சேவையினர் தெரிவித்துள்ளனர். களுவாஞ்சிக்குடி வைத்திய சாலையில் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் நேற்று மரணமானார். இதனையடுத்து மட்டக்களப்பில் சுகாதார சேவை முனைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த சில நாட்கள் நாட்டில் பெய்து வரும் மழை காரணமாக நாட்டின் பல பகுதிகளிலும் டெங்கு நோய் பரவல்ஏற்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. எனவே மக்கள் கொதித்தாறிய நீரைப் பருகுமாறு சுகாதார சேவையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (32)

- உ.பா.வ.த்தால் பாதிப்பிற்குள்ளான மக்களை -

# பன்னாலை அரச காணிகளில் குடியமர்த்தும் நடவடிக்கைகளுக்குப் படையினர் தடை

ராணுவ உயர் பாதுகாப்பு வலய நடைமுறையால் மீளக் குடியமர முடியாது அகதி முகாம்களில் வாழும் மக்களைப் பன்னாலைப் பகுதியில் உள்ள அரச காணி களில் குடியமர்த்த உதவும் வெளிநாட்டு நிறுவனங்கள் எடுத்த முயற்சிகளுக்குப் படையினர் தடை விதித்துள்ளனர்.

மேற்படி பகுதியில் உள்ள அரச காணிகள் படையினரின் பாதுகாப்பு நிலைகளை அண்மித்துக் காணப்படுவதால் அங்கு மக்களை குடியமர்த்துதல் படையினரின் பாதுகாப்பிற்குக் குந்தகமாக அமையும் எனக் கூறி யாழ்மாவட்ட இராணுவத் தலைமையகம் மறுப்புத் தெரிவித்ததால் அப்பகுதியில் மக்களைக் குடியமர்த்த உதவும் அமைப்புக்களால் எடுக்கப்பட்ட முயற்சிகள் கைவிடப்பட்டுள்ளன. இந்த மக்களின் நிலை பரிதாபம். (33)

# வடபகுதி முழுமைக்குமான தளபதியாக சரத்பொன்சேகா

(கொழும்பு)
வடபகுதி முழுவதற்குமான இராணுவ பொறுப்பதிகாரியாக மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகா நியமிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

யாழ் கட்டளைத் தளபதி பதவியிலிருந்து மாற்றப் பட்டதினால் உருவான அதிருப்தி நிலையைத் தொடர்ந்தே இந்தத் திடீர் பொறுப்பு அளிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. எனினும் சிறிலங்கா இராணுவத் தரப்பினரால் இந்தச் செய்தி இதுவரை ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.(32)

### மீண்டும்..

பதற்கு முழு முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றேன் என்று கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் தெரிவிக்கையில்;

இன்னு மதிக்கப்பட வேண்டியவைகள் மதிக்கப்படவில்லை. போற்றப்பட வேண்டியவைகள் போற்றப்படுவதில்லை. இதனால் நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு பிரதான இரண்டு கட்சிகளையும் இணைத்து செயற்படுவதற்காக அளப்பரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றேன். இந்தக் கட்சிகளோடு நாட்டிலுள்ள ஏனைய கட்சிகளையும் இணைத்துக் கொள்ள நான் பெருமுயற்சிகளை எடுத்து வருகின்றேன் என்றும் அவர் கூறினார்.

### மட்டு..

மக்கள் திரண்டு வணக்க நிகழ்வில் உணர்வுபூர்வமாகக் கலந்து கொண்டுள்ளனர்.

இதேவேளை அம்பாறையில் 3500 மாவீரர்களின் திருவுருவப் படங்கள் தாங்கிய நினைவு இல்லம் இன்று அம்பாறை அரசியல் பொறுப்பாளர் பாவா தலைமையில் திறந்து வைக்கப் படவுள்ளது.

### பாதுகாப்புக்...

திகள் சம்பந்தமாகக் கலந்துரையாடினார்கள். பொலிஸ் மற்றும் தேர்தல் ஆணைக்குழு சுதந்திரம் சம் பந்தமாகக் குழு கலந்துரையாடியதாக வட்டாரங்கள் கூறின. கூட்ட முடிவில் எதுவித உடன்படிக்கையும் எட்டப்படவில்லை. மார்கழி 15 இல் அவர்களுடைய தீர்மானங்களைக் குழு முடிவுக்குக் கொண்டு வர கூடுவதோடு குமாரதுங்கவுக்கும் பிரதமருடைய அரசாங்கத்திற்கும் இடையிலான முரண்பாடுகளைத் தீர்க்கப்படுவதற்காக நேற்று சந்தித்துள்ளனர்.

### சிறிலங்கா...

தற்கு அமைச்சரவையால் மூன்று அங்கத்தவர்கள் நியமிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் வடக்கு-கிழக்கு கடற்பரப்பில் புலிகளின் நடவடிக்கைகள் 24 மணிநேரமும் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் தயாசந்தகிரி தெரிவித்தார்.

### யாழ்.குடா...

செயற்பாடுகள் அதிகரித்துள்ளன.

இந்தவகையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முன்றலில் நிறுவப்பட்டுள்ள மாவீரர் எழுச்சி நாள் அலங்கார வளைவுகளை அகற்றுமாறு படையினரால் விடுக்கப்பட்ட பணிப்பை அடுத்து அப்பகுதியில் பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளது.

அவ்வாறு இவ் அலங்கார வளைவுகளை அகற்றாது விடின் பொலிசார் மூலம் அவற்றை பலவந்தமாக அகற்றப் போவதாகவும் படைத்தரப்பால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில், தமிழீழ மாவீரர் எழுச்சி நாளை முன்னிட்டு யாழ். இந்துக்கல்லூரி மாணவர்களால் பாடசாலை முன்றலில் அலங்கார வளைவொன்று நேற்றுப் பிற்பகல் நிறுவப் பட்டிருந்தது.

அவ்வேளையில் பிற்பகல் 6.00மணியளவில் அங்குவந்த படையதிகாரிகள் சிலர் குறித்த அலங்கார வளைவில் பொறிக்கப்பட்டிருந்த "தமிழீழ வரைபடம்" மற்றும் ஆயுதம் தாங்கிய போராளியினது உருவப்படம் ஆகியவற்றை அங்கிருந்து அகற்றிவிடுமாறு மாணவர்களைப் பணித் திருந்தனர்.

எனினும் அவ் அலங்கார வளைவை அங்கிருந்து அகற்ற மாணவர்கள் தரப்பில் மறுப்புத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து இவ்விடயம் தொடர்பாகப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத்திற்கு படைத்தரப்பால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இம் முறைப்பாட்டையடுத்து அங்கு நேரில் வருகை தந்த கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகள் அங்கு அஜூராகி யிருந்த படை அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடாத்தியபின் வெளியேறிவிட்டனர்.

எனினும் சுமுகமானதோர் நிலையை உருவாக்க ஏதுவாக அவ்விடத்தை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள், விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையிடம் பின்னர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனிடையே நேற்று முன்னிரவு பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்திப்பகுதியில் யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் நிறுவப்பட்ட அலங்கார வளைவு நிர்மாணப்பணிகளும் பொலிசாரால் முன்னதாக தடுத்து நிறுத்தப்பட்டிருந்தது.

இதையடுத்து அங்கு மாணவர்களுக்கும் பொலிசாருக்கும் மிடையே மூண்ட முறுகல் நிலை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலையீட்டால் சுமுக நிலையை எய்தியிருந்தது.

இதே போன்று வடமராட்சி வடக்கில்கரையோர கிராமங்களிலும் மாவீரர் தினத்தை முன்னிட்டு அலங்கரிப்பு வேலைகளில் நேற்று முன்தினமிரவு ஈடுபட்டிருந்த பொதுமக்கள் படையினரால் தடுக்கப்பட்டிருந்தனர். எனினும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் இவ் அலங்கரிப்பு வேலைகள் நேற்றுக் காலை வரை பொதுமக்கள் மற்றும் மீனவ சங்கங்களால் மேற்கொள்ளப்பட்டது.

மாவீரர் எழுச்சிவார 2ஆம் நாளான நேற்று குடாநாட்டின் பல பகுதிகளிலும் மாவீரர்களது பெற்றோர் பொது அமைப்புகளால் கௌரவிக்கப்படும் நிகழ்வு இடம் பெற்றிருந்தது. (27)

### விடுதலைப்புலிகள்..

கள் அவர்கள். சமாதானத்தினை நேர்த்தியாகக் கடைப்பிடித்து வருகின்றனர்.

தமது உரிமைக்காக போர் புரிந்த அமைப்பு போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திட்டுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றது. இதன் ஒரு படி மேல் போய் நாங்கள் இடைக்கால நிர்வாகம் தொடர்பான முன்வரைவினை சமர்ப்பித்தோம். இதற்கு அடுத்தபடியாக அவர்களும் ஒரு திட்டவரைவினை முன்வைத்துள்ளனர். இது பெறும் வெற்றி இது பரிசீலனையில் உள்ளது.

இருபது வருடம் யுத்தம் புரிந்த அமைப்பு தமது திட்ட வரைவினை முன்வைக்கும் அளவிற்கு வந்துள்ளது. அவர்கள் போர்புரிந்தவர்கள் அரசியல் பிரிவு என்று மிக சொற்பமானவர்களே உள்ளனர்.

இன்றைய சமாதான முன்நகர்வுகளைக் கொண்டுசெல்ல சனாதிபதியால் கைப்பற்றப்பட்ட அமைச்சுக்கள் மிக முக்கியமானவை. பாதுகாப்பு அமைச்சு அவரிடம் இருக்க நாங்கள் சமாதானத்தினை முன் கொண்டு செல்ல முடியாது. எனவே தான் சமாதான முன்நகர்வுகளினை சனாதிபதியையே முன்கொண்டு செல்லுமாறும், ஐக்கிய தேசிய முன்னணி முழுமையான ஆதரவு தரும் என்று கூறியுள்ளோம்.

இந்த சமாதான முன்நகர்வுகளிலே கட்சி பேதமின்றி அனைவரும் தான் முன்கொண்டு செல்லவேண்டும்.

எல்லாக்கட்சிகளினையும் உள்ளடக்கி கொண்டுபோக முடியாவிட்டாலும், பிரதான கட்சிகள் ஒன்றிணைந்து தான் போகவேண்டும். அனைவரின் விருப்பு வெறுப்புக்களுக்கு இடம்கொடுப்பது கஷ்டம் தான் எனினும் சமாதானம் என்பதற்கு அனைவரும் ஒன்றாக செயற்படவேண்டும்.


மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படக்கூடாது. அப்படி ஏற்படும் பட்சத்தில் நாடு பாரிய அழிவை எதிர்நோக்க வேண்டிவரும். எனவே சமாதானத்திற்கு அனைவரும் பாடுபடவேண்டும் என்றார். ரணில் நேற்று மாலை மூன்று மணியளவில் சிறிபுர ரஜமகாவிகாரையினை தூபியினைத் திறந்துவைத்து உரையாற்றும் போது தெரிவித்தார். இந்நிகழ்வில் ஆளும் கட்சி அமைச்சர்கள், எதிர்க்கட்சி நாளாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள், பிக்குமார் என்று நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.(21)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# வீரவணக்கம்

பிறப்பு

16 - 12 - 1933



வீரச்சாவு

24 - 12 - 1997

மூத்த உறுப்பினர்

## லெப்.கேணல் அப்பையா அண்ணர்

(ஐயாத்துரை இராசையா)

மடத்தடி வீதி,
மானிப்பாய்,யாழ்.
(த.முகவரி: 12ம் கட்டை, விசுவமடு)

விடுதலைப்போரைக்கட்டிக்காத்தீர்
துணிவுடன் இறங்கிக்களமாடினீர்
பெருந்தலைவனுக்குத் துணையாகினீர்
இலட்சிய நெஞ்சங்களில் நிலையாகினீர்.

அரசியல்துறை,
தமிழீழ விடுதலைப்புலிகள்,
தமிழீழம்.